ஓம

பரப்பிரஹ்மணேநமஃ

1244

தத்துவராயசுவாமிகள்

அருளிச்செய்த

# சசிவன்னபோதம்

மூலமும்,


திருத்துருத்தி-இந்திரபீடம் கரபாத்திரசுவாமிகள்

ஆதீனம். பிறைசை

**அருணாசலசுவாமிகள்**

இயற்றிய உரையும்.


(3-ம்பதிப்பு.)


இவை

ஷை உரையாசிரியர் மாணாக்கர்

ஈசூர். ஸ்ரீ சச்சிதாநந்தசுவாமிகள்

பரிசோதித்[illegible]ரதிக்கிணங்க

ஷை சச்சிதாநந்த சுவாமிகளின் தருமபரிபாலன சபையாரால்

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டன.

---

1909.

விலை அணா-8.


**Copyright Registered.**

மகாமகோபாத்தியாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல்நிலையம்

பரப்பிரஹ்மணே நம:.

# உரைச்சிறப்புப்பாயிரம்.

ஈசூர். ஸ்ரீ சச்சிதாநந்தசுவாமிகள்

இயற்றியருளிய

## நேரிசையாசிரியப்பா.

திருத்தகு தெய்வத் திருவா ரூரிற்
குருத்தகு சுகாதனங் கொண்டுவீற் றிருந்து
பொருளல் லவற்றைப் பொருளெனக் கொள்ளு
மருளிஃ தென்று மயங்கறக் காட்டு
தேசிற் சிறந்த சிவப்பிர காச
தேசிக னடியைச் சிந்தையிற் கொண்டு
புந்தி விகற்பப் பொய்யறு நீங்கிச
சித்துரு வாகித் திகழ்பவ னெந்தைச்
சொரூபா நந்தன் சொற்றவ றுது
நிருபா திகமெனு நிலையதுங் கடந்தங்
கபபொரு ளப்பொரு ளாகி விளங்குந்
தபபொப பிலாத தத்துவ ராய
ரம்மெனச் சொல்ல வகலென வாசான்
றபமதி கடந்து சாற்றிய தான

# உரைச்சிறப்புப்பாயிரம்.

பதினெண் சாத்திரப் பகுதியி னொன்றாய்
பதிமோ கவதைப பரணியி னடங்குஞ்
சசிவன்ன போதச் சாத்திர மதற்கு
நிசிவன் னமல நிலையது போக்க
வுரைநயம் பொருணய மொருங்குற நோக்கி
யுரையியற் றினனெளி துணர்தர யாரு
மூவாமதி வநதிவர்ந் துலவுமா ளிகைநிரை
தவாப்பிறை யாறெனுந் தண்டமிழ் நாட்டின
னறிவன்றி யில்லை யறிவன வெல்லா
மறிவாக் காண்டற் காவன வாக்கிய
வாதிசங் கரனன் றணிபெற நாட்டிய
பேதியா விந்திர பீடத் தமர்ந்து
திருத்துருத் தியின்கட் சீர்பெற விளங்குங்
கரபாத் திரனெனுங் கடவுளா தீனத்
திற்குரி யவனுந் திருநா கையிலொளிர்
சிற்பிர காசத திருவரு ணாசல
வடிகளுக் கடிய னனுபவ ரசமாய்ப்
படிமிசைத் திகழ்பவன் பதைப்பற நோக்கித
தன்னைத் தரற்குத் தக்கவன்
மன்னரு ணாசல மகானுபூ தியனே.

ஓம்.

பரப்பிரஹ்மணே நம:.

# சசிவர்ணபோதம்.

உரையாசிரியர் கூறு

## பிரஹ்மஸ்துதி.

அதிதபூ ரணமா யெங்கு மாகியு மாகா தென்றும்
புதியதாம் பரமா னந்த போதனைப் புணர்ந்து வாழ்வாம். (க)

தேவர்மா னிடர்மற் றன்னோர் முனிவரர் சிந்தைக் கெட்டா
மூவரு மறையும் போற்று முதல்வனைப் போற்றல் செய்வாம்.

## விநாயகஸ்துதி.

வேறு.

தில்லை வாழ்கற் பகன்பதஞ் சிந்திக்க
நல்லிந் நூற்குறை நாவி னுதிக்குமே. (௩)

## சுப்பிரமணியஸ்துதி.

சிதம்ப ரத்தில்வாழ் சிங்கார வேலவன்
பதம்ப ணிந்துரை பன்னப்பா லிக்குமே. (௪)

## நடேசஸ்துதி.

புண்ட ரீக புரத்தனைப் போற்றவித்
தண்ட மிழ்க்குறை தானேவி ளங்குமே. (௫)

## சிவகாமிஸ்துதி.

புலியூர் வாழுஞ்சிற் பூவையைப் போற்றவே
வலிய வந்துரை வாய்த்திடுங் காணுமே. (௬)

## குருஸ்துதி.

வேறு.

திருத்துருத்தியின் மேவிவாழுங்கடேசிகன்கரபாத்திர
னருட்பணிக்குரியோர்பதப்பணிந்தன்பிணைவருணைகவாழ்
குருபரன்னருணாசலப்பெயர்கொண்டதேசிகன்கோதிலா
விருபதப்பணிந்திந்தநூற்குரைசெய்வன்யாவுமிலங்கவே. (௭)

## அவையடக்கம்.

வேறு.

பிரமகூடத்தன் றன்னிற் பிரிவற நிறைந்து நின்ற
தாமற விளங்குஞ் சோதித் தற்பரன் றன்னைக் காட்டு
முரையது முளவோ வென்னி லொளிர்பளிக் கதனைக் காண
மரைமுகந் தோன்று மாபோல் வயங்கிடு மென்பர் மேலோர்.

இவ்வுரை செய்தோன் வாக்கி னெளிமைபோ லிஃதென் றெண்ணித், திவ்விய வுணர்வின் மிக்கோர் செப்பிடா ரஃ தென்னென்னிற், கவ்விய பொருளி லக்க வுயர்வினை வரைந் தோன் றீனஞ், செவ்விய பொருளோன் றன்னைச் சேர்ந்திடா ததனான் மாதோ. (௧)

## நூற்பெருமை.

காணிபுகழ் தத்துவனார் தாமுரைத்த ஞானப்
பரணிதனைக் கட்டவிழ்த்துப் பார்க்கிற் - கரணமுடன்
சேர்ந்துமண வாது சிவமணமே பூரித்துச்
சாந்தமண நாறுமே தான். (௧)

## நூலாசிரியரது
## சொரூபவணக்கம்.

படைப்பானும் வியன்ஞாலங் காக்கு மாழிப்
படையானும் படைத்தளிக்கப் பட்ட வெல்லாந்
துடைப்பானுஞ் சுருதிகளுந் தொழுது போற்றுஞ்
சொரூபானந் தச்சுடரைத் தொழுதல் செய்வாம். (௨)

## முன்னூற்றொடர்பு.

அருவ னாயினு மன்பர்க் குருவமாய்
வருவ னென்பது மாமறை காணுமே. (௩)
தேவி யிப்படி கூறத் திருவுளம்
பாவி யேற்கில தென்று பதைக்கவே. (௪)

# சசிவன்னபோதம்.

—(0)—

சசிவன்ன போதமென்பது சசிவன்னனது ஞானத்தை யுணர்த்து நூலென ஆறும் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித் தொகையாய்ப் படலத்திற்குக் காரணக் குறியாயிற்று.

# இந்நூற்கவதாரிகை.

வடமொழியி லமைந்து மாட்சிமைபெற்று மறைமுடிவின்கண் விளங்கு மகாவாக்கியத்தி னிலட்சியார்த்தமாகிய வத்துவித சொரூபமே சிரவணாதிகளா லையந்திரிபறத் தாமெனத் தேர்ந்த தந்துவராயசுவாமிகள் தாம்பெற்ற சுவானுபவப் பேறெளிதில் யாவர்க்கும் விளங்கக் காருணியத்தாற் றன்பாற் பொங்கிய தென்னூற் பிரபந்தங்களிற் பதினேழாவதாயுள்ள மோகவதைப் பரணியி லபரிச்சின்ன வஸ்துவணக்கமே கடவுள் வாழ்த்தும், மகான்கள் வாக்குத்திறத்தலே கடைதிறப்பும், தாபத்திரயமே பாலை வனமும், பிரபஞ்சத்தவரே புறச்சோலைப் பேய்களும், அவர்களிற் சற்கிருத்திய முள்ளவர்களை யுட்சோலைப்பேய்களும், பிரமசமுகமேபலிபீடமும், சுத்தமாயையே காளியும், சிற்சத்தியே யாலவிருட்சமுமாமெனப் பரணிக்குரியவங்கங்களாகத் தொகுத்து மேற்கூறிய பேய்க்கணங்க ளுணவில்லாமற் பசியான்மெலிந்து தேவிபாற் சென்றுமுறையிட அதற்குத்தேவிநிரதிசயானந்தத்தைப் பிரமமாகவும் அதனது பகிர்முகசங்கற்பத்தை மாயாசத்தியாகவும், அக்கூட்டாவிலுதித்த சங்கற்பத்தை மானதபுத்திரனாகவும், அவனது பகிர்முக சங்கற்பத்தைப் பிரவிர்த்தியென்னு மூத்த மனைவியாகவும், அவனது அந்தர்முக சங்கற்பத்தை நிவிர்த்தியென்னும் இளைய மனைவியாகவும், மூத்தாண் முயக்கிலுதித்த மயக்கத்தை மோகனென்னும் புத்திரனாகவும், இளையாண் முயக்கிலுதித்த தெளிவை விவேகனென்னும் புத்திரனாகவும், அம்மோகத்தைச் சார்ந்த சங்கற்பங்களைக் காமனாதிய படைத்தலைவராகவும், அவ்விவேகத்தைச் சார்ந்த சங்கற்பங்களை நிரூபகனாதிய படைத்தலைவராகவும், காமனாதிய படைத்தலைவர் காரணமா யுதித்த சங்கற்பங்களை மோகனது சேனாசமுத்

திராசகவும், நிரூபகனுகிய படைத்தலைவர் காரணமாயுதித்த சங்கற்பங்களை விவேகனது சேனைசமுத்திரமாகவுங் கற்பித்து ப்ரமத்திற் கிளையதாயுள்ள மானதமென்பவன் தனது தாயாகிய மாயையென்பவளி னுறுமதி பலத்தைப் பெற்றுத் தனது தந்தையாகிய பிரமத்தைச் சிறைச்சாலையிற் பந்தனஞ்செய்து தனது மூத்த மனைவியின் சுதனை மோகனுக்குப் பட்டந் தரித்துத் தனது இளைய மனைவியின் சுதனை விவேகனை மோகன் சொன்னவாறு கேட்டு, அவன் வசப்படுத்திப்போக, அன்றுமுதற் காமனுகிய மந்திரமே சேனைத் தலைவர் கூடி விவேகனுகியருக்குக் கொஞ்ச மிடங்கொடுத்தால் நமது பிதாமகனுகிய பிரமத்தினது சார்புபெற்றவர்கள் நம்மைத் தமது வசப்படுத்திச் சிக்கப்படா விடுசெகண்செய தலையக்காண்ப மாதவி னிவர்களைத் தலையெடுக்கா தடக்கி வதைசெய்து அருஞானநந்தராக்கான் மூடப்பெற்ற செந்தாமண்ணியத்தில் விடயமெனுங் காய்ச்சனிகளைத் தின்று சீவித்திருக்க வெந்திசையிலுங் காவற்பாரத்தியிட்டுத்த நலமென்றுலோசித்து அவ்வாறுசெய தவர்களைத் தூரத்திவிட, அப்போது விவேக னிரூபகனுகிய மந்திராலோசனைத் தலைவரைக் கூட்டி இனி யாம் எவ்விதத்தாலேனும் நமது பிதாமகன் சார்புபெற்று அவரது சிறை தவிர்த்தற்கும், பிதாமகி சாபமொழித்து மோகனுகியரை நமது வசப்படுத்திக்கருவறுத்தற்குட் எங்ஙனஞ் செய்தா லியாவருஞ் சுகமுறுவார்க ளென்பதற்கும் எவ்வித முயற்சியா லிவர்கள் செயிக்கப்படுவார்களென்பதற்கும் ஏற்ற வாலோசனையி லிருக்கையி லஃதுணர்ந்த வவ்வதீதப் பிரமந்தானே சொரூபாநந்தமென நாமரூபங்கொண்டு விவேகனுதியர்பா லெழுந்தருளிவந் தவர்கட் கனுக்கிரகிக்க அவ்வனுக்கிரகத்தை யவர்கண் மிக்க வுபபலமாகக்கொ

ண்டு, மோகனுதியவை நீர்மூலப்படுத்தி வெல்ல, அங்ஙனம் வென்ற போர்க்களத்தின்கட் கிடைக்கின்ற மாமிசாதிகளைப் பாகஞ்செய்து அதனைப்புறச்சோலைப்பேய்கட்கும், அஸ்தியாதிகளை யிடித்துக் கூழ்செய்து அதனை யுட்சோலைப்பேய்கட்கும், அவற்றின் பவப்பசிதீரவளிக்கு முயற்சி நடக்கப்போகின்றது. இஃதிங்கன் நல்லகாலமெனத் தேவி பேய்கட்குக் கூறியதாக வகுத்து, "அருவ னுயினு மன்பர்க் குருவமாய் வருவ" னென்பதற்கிணங்க வோரிதிகாச முண்டாமெனத் தோன்றிய ஐயந் தவிர்த்தற்கு விஷ்ணு முதலிய தேவர்களுக்குப் பரசிவனுபதேசித்த விதிகாசத்தைத்தானே யிங்கே முத்திகூறலென்னு மத்தியாயமாக்கி யதிலவ்வதீதப் பிரமமே நாரந்திபாராயண னுக வடிவங்கொண் டெழுந்தருளி வந்து சசிவன்னனுக் கனுக்கிரகித்த வுபதேச சம்பிரதாயத்தைக் கூறுவது.

## நூல்.

அவதாரிகை:—பக்குவவான்க டமது பவத்துன்ப நீங்குமோவெனத் தபிக்கு மச்சநீக்கி யவர்களை யகமுகப்படுத்தல்.

கவி:—அலகை யச்ச மறவக வான்களு
மூலகின் முத்தி பெறும்பரி சோதுவாம்.

**(இதன் பொருள்.)** அலகை - சமயவான்களென்னும் பேய்களாது, அச்சமற பவப்பிணிக்கஞ்சு மச்சந்தீர, அகவான்களும் - அகம்பாவச் சிரேட்டரும், உலகில் - பிருதிவியண்டத்தில், முத்திபெறும் பரிசு - முத்தியடையு மார்க்கத்தை, ஓதுவாம் - சொல்லுவாம்—என்றவாறு.

முத்திபெறும்பரிசு அலகைக் கன்மையானும், முன்னர்ச் சமயவான்களையே பேயெனக்கற்பித்துக் கூறினமையானும், இங்கே யலகை யென்றதற்குச் சமயவான்களெனவும், முமுட்சுத்துவம். சமாதிசட்கசம்பத்தி, இகமுத்திரார்த்த பலபோக விராகம், நித்தியாநித்திய வஸ்துவிவேகம், யோகம், கிரியை, சரியை, நாஸ்தி, நபாதித்துவம், இம்மை மறுமைக்கேற்ற சிந்தனை கனவினுமின்றிக் கண்டதே காட்சி கொண்டதே கோலமாய் நிற்கு மவுட்டிக தசையோனைய யகம்பாவச் சிரேட்டரெனவும், ஏனையதிகாரிகளின்றி முத்திப்பேறு மக்கட்கேயிலாதலானும். அம்மக்கட் பேறுக்கிடம் பிருதிவியண்டமாதலாலும், இங்கே யுலகென்றதற்குப் பிருதிவியண்டமெனவு முரைகொண்டாம். அகவான்களு மென்பதற் கந்தர்முகிகளுமெனப் பொருள்கொள்ளி னவர்கள் முத்திபெறும் பரிசோதுவதாற் சிரேட்டமில்லை; ஆதலிற் கூடாது. சாதனமுதிர்ந்தோருமன்றி யேனையோருமெனப் பொருடரக்கிடந்தவகவான்களு மென்பதின்கண்ணுள்ள உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை.

வினா:—சமயவான்களை யலகையென்றதென்னை?

விடை:—வாச்சியார்த்தலட்சியார்த்தங்களைச் சுருதிகாரணமாயன்றித் தற்பிரத்தியட்சகாரணமா யுணராமையானும், அங்ஙன முணராதவிடத் தகம்புறத்தி னிறைவாய்த் தமக்கு விளங்குவது விடயகதப் பிரத்தியட்ச மாதலானும், அவ்விடயகதப் பிரத்தியட்சத்தினின்று மவர்கூறும் வாச்சிய லட்சியார்த்த சித்தாந்த முரணுமாதலானும், அங்ஙன முரணுதல் தெரியாதுரைக்கும் வசனம் முன்னுக்கும் பின்னுக்குஞ் சம

பந்தமற்ற வுளறலாயமையு மாதலானும், அவ்வுளறல் பேய்க் குணமாகலானு மென்க.

வினா:—பரமேசுரனாதிய தேவர்களாலும் முனிவர்களாலும் விதிக்கப்பெற்றது சமயமன்றோ?

விடை:—ஆம். அவரங்ஙனே சோபானமாய்த் தானே தானாக விளங்குவது முத்தியாதலி னதனை வெளிப்படுத்து நிமித்தம் நான்கு பூதத்திலும் வியாபித் திருப்பதுமன்றியு மவைகளாக விளங்கியு மொருவர்க்குந் தோன்றாது நிற்கும் பூதாகாயத்தைக் காண்பிக்கு நிமித்தங் கடாகாய முதலிய வாகாயத்தைக் காண்பித்து அவற்றை நீக்கிப் பூதாகாயத்தை வெளிப்படுத்துஞ் சாதிருசியத்தைப்போலப் பிரகிருதி முதற் பிருதிவிவரையினும் வியாபித்திருப்பதுமன்றியு மவைகளாக விளங்கியு மொருவருக்குந் தோன்றாது நிற்குஞ் சிதாகாயத்தை யாவர்க்குந் தரிசிப்பிக்கச் சாதிருசியமாகக் கூறிய பிம்பப் பிரதிபிம்ப ஞாயத்தாற் சமயோசிதமாகப் பக்குவத் தளவுக்கேற்கச் சேசுவரகூடத் தபிரமமெனவும், அதற்கதீதஞ் சுத்தப்பிரமமெனவும், இதுவேதானெனவுங் கற்பித்துக் கூறியதைப் பூருவபட்சமென்றுஞ் சித்தாந்தமென்று முப்த்துணரா வகையறியா தந்தந்த வவசரநிலையே யுண்மைப்பொருளெனக் கருதி மேற்றாவா தங்கங்கே தியங்கி நிற்பா ரந்நெறிச்செல்ல வேதாந்தமுத லுலகாயத மீறாக்கிடந்த சமஸ்த சமயங்களும் விதிக்கப்பெற்றனவென்க.

வினா:—அற்றேல், வேதாந்த ரபிப்பிராய மிதுதானோ?

விடை:—இதுவேயாமென்க.

(இதன்றாற்பரியம்.) உலகத்தின்கண் சமயத்தினுஞ் சமயாதீதத்தினுமுள்ள முமுட்சுக்கள் பளுவான மார்க்கங்களை யிறுதியாகக்கருதித் தவியாமலவர்கட்குச் சுளுவான மார்க்கமாயுள்ள முத்திகூறலைக் கருணையாற் கூறினாரென்பதாம்.(௧)

அ-கை:—மேன்முத்தி பெறும் பரிசென்பது ஞானிகள் கிருபாநோக்கத்தாலெனல்.

கலி:—புணர்ந்த பாவ மெலாம்பரி பூரண
முணர்ந்த ஞானி விழிபட வோடுமே.

(இ-ள்.) புணர்ந்த - சங்கற்பத்தாலணைந்த, பாவமெலாம் - பாவ சன்மங்க ளனைத்தும், பரிபூரணம் - யாவுஞ்சின்மாத்திரமாக, உணர்ந்த ஞானி - தெளிந்த ஞானவானது, விழிபட - கடாட்சந்தங்க, ஓடும் - நீங்கும்—எ-று. ஏ-அசை.

(பதசாரம்.) தனது சங்கற்பத்தினுண்டான சீவேசுரசகத்து முதலிய கற்பித மனைத்தினுங் கூடுதலைப் புணர்ந்தபாவமெலாம் எனவும், அச்சங்கற்பந் தன்னிற் கரைந்து யாவுந்தானாக விளங்குவதைப் பரிபூரண முணர்ந்த ஞானியெனவும், இவ்விளக்கப்பார்வையாற் சகல கன்மமு நசித்தலை விழிபட வோடும் எனவுங் கூறினார். இங்ஙனங் கூறுதற்குப் பிரமாணம் ஞானநூற் பலவிற்றுமுள்ள உபதேசகாண்டத்திற் காண்க.

வினா:—"தாந்தாமுன் செய்தவினை தாமே யனுபவிப்பர்" என்னு மௌவைவாக்கியப்படியும், "தானே சங்கற்பித்துத் தன்மாத் திரத்தால்" என்னும் வாசிட்ட வாக்கியப்படியுஞ், தனது சங்கற்பத்தி னறியாமையினாற் கட்டுப்பட்ட சஞ்சிதமாகிய வினைகளனுபவித்தாவது அச்சங்கற்பத்தினறிவினாலவ்வி

னைக ளொரித்தாவது தீரவேண்டுவதே யன்றி யொருவர் சங்கற்பத்தினா லுண்டான வினைக ளொருவர் சங்கற்பத்தினா லெங்ஙனந் தீரும்?

விடை:—"பஞ்சினை யூழித்தீப்போற் பலசன்ம விவித வித்தாஞ், சஞ்சித மெல்லாஞானத் தழல்சுட்டு வெண்ணீறாக்கும்" "ஐயனே யெனது ளேநின் றனந்தசன் மங்களாண்ட, மெய்யனே யுபதேசிக்க வெளிவந்த குருவே போற்றி" என்ற கைவல்லிய நவநீதப்படியும், "ஆனந்தங்குரு வறிவேசீடன்" என்ற தத்வாத்திரையாசாரிகள் சம்பிரதாயப்படியும், "தேட்டந் திரண்ட திருமேனி" என்ற வள்ளலார் வாக்கியப்படியும், தனதறிவிற் காதாரமான வானந்தோதயத்திலவ்வறிதல் கரைதலா லவ்வினைக ணீங்குமென்க.

(இ-ள்.) சித்தே யானந்தம் ஆனந்தமே சித்தென்ற ஒருமையான பிரமமே யோருருவாகவந் தனுக்கிரகிக்கு ஞானசாரியர் விழியின் மகிமை கூறியதாம். (௨)

அ-கை:—அதனை யுடையவனது மகிமையும் அம்மகிமை யுள்ள வோரிதிகாசமுங் கூறல்.

வேறு.

கவி:—எழிலொரு ஞானி புகழென்னை கூற
வுயர்வி டுவன்சொல் வழிசெய்
தொழிலாள ராகை யதுகேளு முன்னை
யிதிகாச மொன்று சொலவே.

**(இ-ள்.)** எழிலார் [illegible] - ([illegible]) [illegible] **ழுருகின்ற)** [illegible], [illegible], **புகழ் - புகழை,** [illegible] - [illegible] - மேலான [illegible], [illegible] - இருளானவாறுபோ[illegible] [illegible] **பாரதை - அழியா தாதல், முனிவனை யதிகாரம் - (**[illegible]**ளை)** [illegible], [illegible] - ஓர் **பிருகன்ன** [illegible] யதுபோது - அன்றுபாரு[illegible] கேட்பாய் — எ - று. ஏ - அசை

(இ-பு.) [illegible] முனிவரிடத்து [illegible] முனிவரிடம் கூறியதாம். (ரு)

அ-ரை — அவன் [illegible] பட்ட கூறல்.

சவி — தந்தப் பூ [illegible] சொட
வைப்புரம் பேறு [illegible]
செந்தாமரைக்கண் முதலவற்கெம்மண்ண
திருவாயமலர்ந் ததுவே.

(இ-ள்) சுந்தரப் பூரணன் [illegible] யமநீங்க, பிர
மனலே செய்த - குந்தி [illegible] செய்த, அவனை - அப்புருட
னை, பற்றப்பேறுந்தனை - அடைந்தசக்தியை முன் - பூருவத்தில,
செந்தாமரைக்கண்ண - சிவந்த தாமரை மலர்போன்ற கண்களை
யுடைய, முதலவற்கு - முதலவனாகிய விஷ்ணுவுக்கு, எம்மண
ணல்-எமது பரமசிவன், திருவாயமலர்ந்தது - அனுக்கிரகஞ்
செய்தது, இதுவே - இக்கதையேயாம்—எ-று. ஏ-அசை

தாபமென்றது - தாபத்திரய துன்பங்களை.

(இ-ம்.) அவ் விதிகாசம் வந்த திவ்வாறென்பதாம். (௪)

அ-கை:—அவ்விதிகாசத்தில் முத்திபெற்ற ஞானியை[illegible]னல்.

கவி:—உவமிப்பின் ஞானி விழிபட்டு முன்னை
வினைவிட்டு முத்தி யுலகிற்
றவமற்ற வெய்ய வினையே புரிந்த
சசிவன்ன னெய்து கதையே.

(இ-ள்.) உவமிப்பில்-ஒப்பிடப்படாத, ஞானிவிழிபட்டு-ஞானவானது கிருபாநோக்கந் தங்கி, முன்னை வினைவிட்டு - முன்னுள்ள சஞ்சிதாதிய வினைகணீங்கி, முத்தி - மோட்சத்தை, உலகில் - இவ்வுலகத்தின்கண், தவமற்ற - அவமாகிய, வெய்யவினையேபுரிந்த - கொடியதீவினையையே செய்த. சசிவன்னன் - சசிவன்னனென்பவன், எய்துகதையே-அடைந்த கதையேயாம்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) அவ்வரலாற்றின் முத்திபெற்ற சீடனது நாமத்தைக் கூறியதாம். (௫)

அ-கை:—அவனது தீவினையின் வலி யிங்ஙனமெனல்.

கவி:—ஏமம் புகல்வா ருளர்பா தகரா
மியாவர்க்குளு மிக்கவ னாகுமிவ
னேமம் புகல்வார் குலமும் மெரிவாய்
நரகம்புகு மாறு நடந்தனனே.

(இ-ள்.) ஏமம் - விடயானந்தமே, புகல்வார் - கதியாகவடைந்தவர்களுக்கு, உளர்-உலகத்திற் பாதகராயுள்ள, பாதக

ராம் - **பாவிகளாகிய.** யாவர்க்குளும் - அனைவருக்குள்ளும், மிககவனாகும் - மிகுந்தவனான, இவன் - இச்சசிவன்னன், நாமம் புகல்வார் - தனது நாமஸ்மரணஞ் செய்தவர்களும், குலமும் - அவர்கள் வம்சமும், எரிவாய் - அக்கினி மயமாகிய, நரகம்புகுமாறு - மாபூதியென்னுநரகத்தை யடையும்படி, நடந்தனன் - நடந்துகொண்டான்—எ-று. வ - அசை.

குலமு மென்றது-இறந்தது தழீஇய எச்சவும்மை.

(இ-ம்.) இவனும் முறைத்தவனு மவனது குலமு மடையுங்கதியைக் கூறினதாம். (கூ)

அ-கை:—அவ்வலியாற் றன்வமிசப் பிதிரர்க் குற்றது கூறல்.

கவி:—மலமேவிய தீவினை யின்வலியான்
மகிழும்பர் பதத்தி லிருந்தவிவன்
குலமேவிய தென்புல வாணர்களுங்
கொடிதாநர கங்குடி யேறினரே.

**(இ-ள்.) மலமேவிய - மும்மலப் பெருக்கால் விளைந்த, தீவினையின் - கொடிய பாவகிருத்தியத்தின், வலியால் - வலிமையினல், மகிழ் - மகிழத்தக்க, உம்பர்பதத்தில் - சுவர்க்கத்தில், இருந்த - சுகித்துக்கொண்டிருந்த, இவன் குலமேவிய - இவன் வம்சத்திற் பிறந்திறந்த, தென்புல வாணர்களும் - பிதிர்க்களும், கொடிதாநரகம் - இரவுரவநரகத்தில், குடியேறினர் - குடியேறினார்கள்—எ-று, ஏ-அசை.**

(இ-ம்.) சாதுர சற்கிருத்தியத்தாற் **சுவர்க்கத்தின்**கண் மகிழ்ந்திருந்த விவன் வம்சத்தாரனைவரு மி**வனது** துர்க்கிருத்தியத்தா லம்மகிழ்ச்சியை நீங்கி நரகதுன்பத்தை யடைந்தார்க ளென்பதாம். (எ)

அ-ங:—மறுமையிலனுபவிக்கத்தக்க வினைப்பயனனைத்து மிம்மையிற்றானே யிவன்பாலெய்தின வெனல்

கவி. —மிகமேவிய புண்ணிய பாவமெனும்
வினையின்பயன் மேலொரு காலமுறா
திகமே வருமென்பத னுளதோ
வெல்லாமிவனைச் செறவெய்தினவே.

(இ-ள்) மிகமேவிய-வரையின்றிவிளைந்த. புண்ணியபாவமெனும் வினையின் பயன் - நல்வினை தீவினைப் பிரயோசனங்கள், மேலொருகாலமுறாது - மேற்பவுஷியகாலத்தி லடையாமல், இகமே - இப்போதே, வருமென்பதனால் - அனுபவிக்கவருமெனச் சுருதிசொல்லுகின்ற படியினால், உளதோ - மேலிவனனுபவிப்பதென்பதுண்டோ, எல்லாம் - தீவினைப் பயனைத்தும், இவனைச் செறவெய்தின - இச் சசிவன்னனை யிம்மைக்கண்ணே மிகவு மடைந்தன—எ-று. ஏ-அசை.

**வினா**:—ஒருவன் செய்தவினை செய்தவனையேயன்றி யேனையோரையு மியக்குமோ ?

**விடை**:—ஆத்மசம்பந்தம், சீவசம்பந்தம், காரணசம்பந்தம், இந்திரியசம்பந்தம், தேகசம்பந்தமெனக் கிடந்த வைந்தனுள்,

**ஆன்மசம்பந்தமாவது:** ஞானாசிரியரானுபதேச லட்சியார்த்தத்தினின்றைத்த சீடன் றற்சுதந்தரமின்றி யவரது பூரணநோக்கிற் சம்பந்தித்தலி னவர்கதி யிவனுக்கு மாதல்.

**சிவசம்பந்தமாவது** காமியாசாரிய ருபதேசவழியினின்ற சீட னவராணையா லிபாகாதி கன்மங்களிற் சம்பந்தித்தலி னவர்போக மிவனுக்கு மாகுதல்.

**காரணசம்பந்தமாவது** அரசன் மனதிற்கிசைந்த வமைச்சராதியோ ரனைவோரையிற் சம்பந்தித்தலி னவனது செங்கோலே யிவர்கட்குமாதல்

**இந்திரியசம்பந்தமாவது** மகளிரது பார்வைக்கிலக்காய் தலைமைப்பட்டவனு மிவ்வாறு கந்தருப்பாலியையப்பெற்ற விடனொருவ னவளது சயிக்கைப்படி யாலிங்கனச் சேட்டையிற் சம்பந்தித்தலி னவள்சுகமே யிவனுக்குமாதல்.

**தேகசம்பந்தமாவது**. மாதாபிதாக்களது சுக்கில சோணிதப் புணர்ச்சியா லுருப்பட்ட மக்க ளவ்விருவருடலினூறிச சம்பந்தித்தலி னவர்கட்குரியவடிவமு நோயுமிவர்கட்கும் வருதலன்றியும் தேகசம்பந்தப் பிதிரர்க ளித்தேக நீங்கியாதனசரீரம் பெற்று மறுமைக்கண் வசித்தலினானும், அவர்களினி வேறோர் பவுதிகவுடல் வருமளவுந் தமது விந்துசம்பந்தப் புத்திரர்கள் பலப்பிராப்திக் கெதிர்நோக்கி யிருத்தலினானும், இவர்கட்குரிய புண்ணிய பாவப்பய னவர்கட்கு முரித்தாதல்.

ஆதலி னிவற்றுட் டேகசம்பந்தத்தா லியக்குமென்க.

வினா —இவர்களடைந்தகதி யவர்களுமடைய வேண்டுமோ?

விடை:—இவர் முத்திபெற்றபல னவர்கள் பௌதிக சரீரத்தோ டனுட்டித் திருந்த பலனை முற்றச்செய் தவர்களைச சுவர்க்கத்திற் சேர்க்குமென்க

"மாதா பிதாக்கள் செய்தது மக்களைச் சாரும்" என்ற பழமொழிப்படி தேகசம்பந்தத்தால் வந்த சீவர்களான புத்திர பௌத்திரர்களால் வரும் நன்மை தீமைகளிற் கிஞ்சித் தக்குலப் பிதிரர்களைச் சாருமென்பதனாற் பெற்றாம்.

(இ-ள்.) இத்தேகத்திற்றானே ஆதிவியாதியான பவத்துன்பத்தை இவனடைந்ததைக் கண்டனமென்பதாம். (அ)

அ-கை·—தந்தை பரமாசாரியாராதலா லிவனது துன்பந் தீர வாலோசித்தா ரெனல்.

கவி·—தன்புத்திர னேயம் விடாமையினாற்
றவறுற்ற விவற்பெறு தந்தையுளந்
துன்புற்றினி யென்னை கொலோபுதல்வன்
றுயர்தீர்வகை யென்று சுழன்றனனே.

(இ-ள்.) தன்புத்திரனேயம் விடாமையினால் - தனது புத்திரவாஞ்சை நீங்காமையால், தவறுற்ற - கிரமந்தவறிய, இவற்பெறு - இவனைப் பெற்ற, தந்தையுளம் - பிதாவின் மனம், துன்புற்று - துன்பத்தையடைந்து, இனி - மேல், புதல்வன்றுயர் தீர்வகை - புத்திரனது துன்ப நீங்கு மார்க்கம், என்னைகொலோவென்று - என்ன விதத்தாலோவென்று, சுழன்றனன் - கலங்கினன்—எ-று. ஏ-அசை.

(இ-ள்.) புத்திரனைச் சுகிக்கச் செய்தல் பிதாவிற்குக் கடமையாதலா லித்துன்பத்தை நீக்கும் விதியை யாலோசித்தா னென்பதாம். (க)

அ-கை:—ஆலோசித்த பின்ன ரிவனைக் கூட்டிக்கொண்டு தீர்த்தயாத்திரை செல்லுதல்.

கலி:—ஒன்றாலும் வினைத்துயர் துய்ப்பதலா
லொழிவிக்கு முபாய முணற்கிலதே
யென்றாலு மறிந்திவ னன்புவிடா
திவனைக்கொ டுழன்றன னெங்கணுமே.

(இ-ள்.) வினைத்துயர் - தான் செய்த வினையினால் வருந் துன்பங்களை, துய்ப்பதலால் - தான்புசித்துத் தீரவேண்டுவதேயன்றி, ஒன்றாலும் - யாதொருத்தியினாலும், ஒழிவிக்குமுபாயம் - நீக்குகின்ற வுபாயம், உணற்கிலதே யென்றாலும் - சிந்தித்தற் கரிதென்கினும், அறிந்து - இவன்படும் வேதனையை யறிந்து, இவனன்புவிடாது - இப்புத்திரன் மேல்வைத்த பிரியநீங்காமல், இவனைக் கொடு - இவனை யழைத்துக்கொண்டு, உழன்றனன் எங்கணும் - பெரியோர்கள் வசிக்குந் தலமெல்லாஞ் சுற்றினான்—எ-று. ஏ-அசை.

உன்னற்கென்றது - உணற்கென இடைக்குறை யாயிற்று.

(இ-ம்.) இத் துன்பம் ஞானிகளாற் றீரவேண்டுமென்றறிந்தவர்க ளிருக்குமிடந் தேடின னென்பதாம். (க0)

அ-கை:—அங்ஙனஞ் சென்றவிடத்துத் தெய்வகதியா லெதிருற்ற வாப்த னிவனுக் கிவ்வியாதி வந்திருக்குங் காரணமு மதுநீங்கும்பருவமுந் தெரிந்ததற்குரியவவுடதங்கூறல்.

கவி:—ஒருமாதவன் மற்றிவன் வேதனைகண்
டொழிவற்றுள வொன்றை யுணர்ந்துணரும்
பரமாகிய ஞானிகள் கண்ணுறலே
பரமௌடத மென்று பகர்ந்தனனே.

(இ-ள்.) ஒருமாதவன்-ஒருமகான், மற்றிவன் வேதனைகண்டு - இவனது கொடிய நோயைப் பார்த்து, ஒழிவற்றுள - பரிபூரணமாயுள்ள, ஒன்றை - பரவஸ்துவை, உணர்ந்துணரும் - அறிவினாலறிந்த, பரமாகிய, - பிரமமாகிய, ஞானிகள் - ஞானவான்கள், கண்ணுறலே - தமதருட்கண்சார்தலே, பரமௌடதமென்று - இவ்வியாதிக்கு மேலான மருந்தென்று, பகர்ந்தனன் - சொன்னான் —எ-று. ஏ-அசை.

(இ-ம்.) தேகமுற்றவிடத் தெதிருற்ற வாப்த னிந்துன்பம் பூரணநோக்காற் றீரவேண்டுமென் றறிவித்ததாம். (கச)

அ-கை:—அங்ஙனமுள்ள ஞானவா னிங்ஙன மிருக்கின் றானெனக் கூறல்.

கவி:—தானந்த மிலாத தனைத்தருவான்
சத்தீச்சுர மென்னு மிடந்தனில்வாழ்
மானந்தி பராயண னென்பவனின்
மைந்தற்குறு நோய்க்கு மருந்தெனவே.

(இ-ள்) தானந்தமிலாத - ஆதிமத்தியாந்தரகிதமான. தனை - தனது சொரூபத்தை, தருவான் - அடியார்களுக்குக் கொடுப்பவன், சத்தீச்சுரமென்னு மிடந்தனில் - சத்தீச்சுர மென்னுந் தலத்தில், வாழ் - வசிக்கின்ற, மானந்திபராயண னென்பவன் - மானந்திபராயணனென்னு நாமத்தை யுடை

யவன். தின்மைசெய்தற்கு - உனதுபுத்திரனுக்கு, உறுநோய்க்கு - பொருந்திய வாதவியாதியான பிணிக்கு, மருந்தென - ஔஷதமென்று சொல்ல—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) அறியாக்குறியு மறிகுறியு முரைத்தன னென்பதாம். (கஉ)

அ-கை:—ஆப்த வாக்கியப்படி சென்று அந்த ஞானவானைக் கண்ணுற்றுத் தனையன்றா அனுபவங் கூறல்.

கவி:—முடியாவுப தேசமி தென்றிவனம்
முனிவன்பத மெய்தி மொழிந்தனனிக்
கொடியான்வெரு வாது குயிற்றியநோய்
கூறற்கரி தாய கொடுந்தொழிலே.

(ஓ-ள்.) முடியா வுபதேச மிதென்று - இவ்வுரை வரையற்ற வுபதேசமென்று, இவன் - இச் சாந்தசீலன், அம் முனிவன் பதமெய்தி - அம்மகான் பாதத்தையடைந்து, மொழிந்தனன் - சொன்னான், இக்கொடியான் - இக்கொடியனான வெனதுபுத்திரன், வெருவாது - பயப்படாமல், குயிற்றியநோய் - செய்தகிருத்தியங்கள், கூறற்கு - செல்லுவதற்கு, அரிதாய - முடியாத, கொடுந்தொழில் - துர்க்கிருத்தியங்கள்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) இவன் செய்த துர்க்கிருத்தியங்க ளளவில்லையென்பது தோன்ற அவற்றைச் சுருக்கிக் காட்டியவாறும். ()

அ-கை:—கூறவே யவனிவன்செய்த வினையின் றிறமறிந் தருணோக்கஞ் சாற்றல்.

கலி:—ஈங்குன்றிருமுன் பகரும் படியோ
விவனைய்திய தீவினை யென்னவெலா
நீங்கும்படி தன்னனு பூதியினு
னிகழும்விழி வைத்தன னின்மலனே.

(இ-ள்.) ஈங்கு - இவ்விடத்தில், உன்றிருமுன் - தேவர் சன்னிதியில், பகரும்படியோ - சொல்லத்தக்கதோ, இவனெய்திய - இவனடாத்திய, தீவினையென்ன - கொடிய வினைகளை யென்று சொல்ல, எலாம் - சஞ்சிதாகாமி யங்களால் வரும் நல்வினை தீவினைகளனைத்தும், நீங்கும்படி - விட்டு நீங்கும்படி, தன்னனுபூதியினல் - தனது சுவானுபூதியினல், நிகழும் - விளங்குகின்ற, விழிவைத்தனன் - கிருபாநோக்கம் வைத்தனன், நின்மலன் - களங்கமற்றவன்—எ-று. ஏ அசை.

(இ-ம்.) இஃதவனது பக்குவம்பார்த் தருட்கண் சாற்றினது அறியுந்திருவடிதீட்சை யென்பதாம். (கச)

அ-கை:—இந்நோக்கத்தால் ஆதிவியாதியிரண்டும் நீங்க வதனைத் தந்தைகண்டு தனதிடத்திற் கேகுதல்.

கலி:—கணியாத பவக்கடு வானதிருக்
கண்வைத்தலும் விட்டன காதுகடும்
பிணியாவையு நல்லபிதா விறைதாட்
பேணிப்பணி யென்று பெயர்ந்தனனே.

(இ-ள்.) கணியாத-கணித்தற்கரிய, பவம் - பவப்பிணிகட்கு, கடுவான - விடம்போன்றுள்ள, திருக்கண் வைத்தலும்-கிருபாநோக்கம் வைக்கவும், காது-வருத்துகின்ற, கடும்பிணி

யாவையும்-கொடிய சஞ்சிதவினையும் தேகவியாதிகளுமாகிய வனைத்தும்,விட்டன-அவனைவிட்டு நீங்கின (அதனைக்கண்டு), நல்லபிதா-சன்மார்க்கமுடைய தந்தையானவன், இறைதாள்-இந்தமகானது திருவடியை, பேணிப்பணியென்று-அன்புற்று வணங்கி நிற்பாயென்று, பெயர்ந்தனன் - அவனைவிட்டுத்தன் பதிக்கேகினன்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) அவ் வறியுந் திருவடி தீட்சையா லெய்தியபய னைத் தந்தை கண்ணுற்றுத் தன்பதிக்கேகின னென்பதாம்.

அ-கை:—தந்தை வாக்கியப்படி யாசிரியர் தொண்டின் மிக்காளுயினு னெனக் கூறல்.

கவி:—இடனேமுத லாக வுவந்திறையோ
　　னேவும்பணி செய்திவ னுஞ்சிலநா
　　ளுடனேயிவ னத்திரு மேனிதனக்
　　குரியானென வுற்றன னும்பனொடே.

(இ-ள்.) இடனேமுதலாக - இங்ஙன மாசிரியர்க்கடிமை யாகப் பிதாவிடுத்துப் போனநாள்முதல், உவந்து - மனமகிழ்ந்து, இறையோன் - ஆசிரியர், ஏவும்பணி - ஏவியபணிவிடைகளை, இவனும் - இச்சசிவன்னனும், சிலநாள்செய்து - சிலதினஞ் செய்து, உடனே - அப்போதே, இவன் - இச் சசிவன்னன், அத்திருமேனிதனக்கு - அவ்வாசிரியர் திருமேனிக்கு, உரியானென - உரியவனென் றுலகுரைக்கும்படி, உற்றன னும்பனொடே - அருளிறையோடு தேகமுஞ் சாயையும்போலப் பொருந்தினன்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) ஆசிரியர் பணியின் முதிர்ந்தன னென்பதாம். ()

அ-கை:—அக்குருபணி மேலீட்டாற் சாதன சதுஷ்டய முதயமாயினவெனக் கூறல்.

கவி—நன்றாமுனிதாள் வழிபா டதனா
னானவித மான பிறபபினைவிட்
டொன்றாகிய வீடுணா ருந்தமர்கட்
குளசாதன நாலு முதித்தனவே.

(இ-ள்.) நன்றாம் - செவ்வையாகிய, முனிதாள் - ஆசிரியரது திருவடியின், வழிபாடதனால் - வழிபாட்டினால், நானாவிதமான - பலவிதமான. பிறப்பினைவிட்டு - பவங்களைநீங்கி, ஒன்றாகியவீடு - தனிமையான திருவாணபததததை, உணருந்தமர்கட்கு - அறியு ஞானிகளுக்கு, உளசாதனநாலும் - உரிய சாதன சதுஷ்டயங்கள், உதித்தன - தாமே யுண்டாயின— எ-று ஏ-அசை.

(இ-ம்.) வெளிப்படை (கஎ)

அ-கை:—அசசாதன மேலீட்டாற் றனதபிப்ராயத்தைக் குறிப்பித்தல்.

கவி:—முனிவன்றிரு முன்புள தன்குறைதான்
மொழிவன்சில வஞ்சலி குஞ்சியதாய்ப்
பணிவந்திரு கண்கள் பதங்களிலே
பலகால்வலம் வந்து பணிந்திடவே.

(இ-ள்.) முனிவன்றிருமுன்பு - ஆசிரியாபூகியசன்னிதானத்தில், உளதன்குறை-தனக்குள்ள குறைவுபாட்டை, மொழிவன்சில - சில சொல்லுவன், அஞ்சலிகுஞ்சியதாய் - சிரசிற்

கைகுவித்துக்கொண்டு, பனிவந்திருகண்கள் - இரண்டுகண்களிலுமானந்தபாஷ்பம்பெருகி, பதங்களிலே - ஆசிரியர் திருவடிகளில், பலகால் - பலதரம், வலம்வந்து - பிரதக்ஷணம் வந்து, பணிந்திட - வணங்க—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) தீர்த்த யாத்திரையாற் சித்தசுத்தியு மச்சித்த சுத்தியினாற் குற்றேவலு மக்குற்றேவலாற் சாதன சதுஷ்டயமு மச்சாதன சதுஷ்டயத்தாற் பவத்துன்பமு மப்பவத்துன் பத்தா லதுநீங்கும் பக்குவமு மெய்தின வென்பதாம் (க௮)

அ-கை:—சீடனது பக்குவத்தைக் குறிப்பி னறிந்ததனை வெளிப்படையாக்கு நிமித்தந் தெரியாதவர்போல் வினாதல்.

கவி:—அருளேவடி வாகிய மாமுனிதா
னறியாதவர் போல வழுங்கலுறும்
பொருளேதென மைந்த னடுங்கினனிப்
பொல்லாத பவப்புண ரிக்கெனவே.

(இ-ம்.) அருளே - பிரம காருண்ணியமே, வடிவாகிய - ஓர் சொரூபமாகி வந்த, மாமுனிதான் - மானந்திபராயணர், அறியாதவர்போல-இவன் பக்குவந் தெரியாதவர்போல, அழுங்கலுறும் - மனவருத்தப்படும், பொருளேதென - பொருள் யாதென்றுகேட்க, மைந்தன் - சீடனை சசிவன்னன், இப்பொல்லாத பவப்புணரிக்கு - இந்தக் கொடிய பவசமுத்திரத்திற்கு, நடுங்கினன் - பயந்தேன், என-என்றுசொல்ல—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) பவத்துன்ப நீங்கு நிமித்த மதனை வெளிப்படுத்தினனென்பதாம். (கக)

அ-கை:—பவத்துன்ப மதிகரிக்கு நிமித்தம் பவத்தைச சாகரமாக வுருவகப்படுத்திக் கூறத் தொடங்கல்.

கவி:—வெருவும்பிற விக்கடல் வித்தாமுன்
வேதாகம கீதை விளம்புமதைக்
குருவுந்தன தன்பன் மனத்தளவிற்
கொளுமாறு தொகுத்திது கூறிடுமே.

(இ-ள்.) வெருவும் - பயப்படத்தக்க, பிறவிக்கடல் - பவ சமுத்திரத்தின், வித்தாரம் - விலாசத்தை, முன் - முன்னமே, வேதம் - வேதங்களும், ஆகமம் - ஈசுரவாக்கியமான வாகமங் களும், கீதை - அரிபிரமாற் சொல்லப்பட்ட கீதைகளும், விளம்பும் - சொல்லும், அதை-அவ்விஸ்தாரத்தை, குருவும் - ஆசிரியரும், தனதன்பன் - தனது சீடனது, மனத்தளவில் - மனதிற் கொள்ளத்தக்க தெவ்வளவோ அவ்வளவு, கொளுமா று - ஏற்கும்படி, தொகுத்து - சுருக்கி, இதுகூறிடும் - இத னைச்சொல்லுவர்—எ-று. ஏ-அசை.

மனத்தளவி லென்பது:—இம்மனமித்துன்ப மொறுக்கு மளவுமெனக் கொள்க.

(இ-ம்.) பவத்துன்பத்தை யினித்தாங்கச் சத்தியில்லை யென்றறிகிற பரியந்தம் பகுத்துக் கூறத் தொடங்கியவாறுங.

அ-கை:—இக்கவிமுதலைந்துகவியாற் பவத்தைச் சாகர மென்றதற்குரிய வங்கங்க ளினையவெனக் கூறல்.

வேறு.

கவி:—மாணை பவங்களான புனலை யுடையது
மதியை விழுங்குகாம வரவு பெரியது

கரண வொழுங்கறுத விடய விரை நுகர்
கணமொ டியங்குமீன மிகவு முகளவதே.

(இ-ள்.) மரண பவங்களான - சனன மரணங்களாகிய, புனலையுடையது - சலத்தை யுடையது, மதியைவிழுங்கு - அறிவை விழுங்குகின்ற, காமவரவு - காமமென்னும் பாம்பு, பெரியது - மிகப்பெரியது, ஒழுங்கறுத - இடைவிடாதுள்ள, விடயவிரை நுகர் - விடயமாகிய விரைகளைத் தின்னுகின்ற, கரணம்-கரணமென்னும், கணமொடியங்குமீனம் - கூட்டங் கூட்டமாகத் திரிகின்ற மச்சங்கள், மிகவுமுகள்வது - மிகவுங் குதிக்கின்றன—எ-று. ஏ-அசை.

உகள்வது—தொகைமொருமை. இங்கேகரணமென்றது அகக்கரண புறக்கரணங்களை. (உக)

இதுவுமது.

கவி:—பெருமித மென்று கூறு பெருமை யுடையது
பிணிக ளெனுங்கெடாத புலவு கமழ்வது
வருமிட ரின்பமான திரைகள பொருவது
மனமெனும் வஞ்சராச மகர முறைவதே.

(இ-ள்.) பெருமிதமென்று - மதக்களிப்பென்று, கூறும்- சொல்லும், பெருமையுடையது - மாட்சிமை யுடையது, பிணிகளெனும் - வியாதிகளென்கிற, கெடாத - நசியாத, புலவு கமழ்வது - நாற்றம் வீசுகின்றது, வருமிடரின்பமான - மாறி மாறி வருஞ்சுகதுக்கங்களான, திரைகள் பொருவது - அலைக ளடிக்கின்றது, மனமெனும் - மனமென்கின்ற, வஞ்சம் - கபடமுள்ள, ராச மகர முறைவது - தலைமையான மகர மச்சம் வசிக்கின்றது—எ-று. ஏ-அசை.

மனமெனுமந்த ராசமகர மெனப்பாட மோதுவாருமுளர்.

## இதுவுமது.

கலி:—அளவி லகந்தை யாமை யபரிமிதமுள
வவாவெ னிறந்தவாழ மறியவரியது
களவு நெருங்குபாரு மலையு முடையது
கலக விடங்கண்மேவு கிரிமி நெளிவதே.

(இ-ள்.) அளவிலகந்தை - வரையின்றிய வகம்பாவமென்னும், ஆமை யபரிமிதமுள - ஆமைகளனேக மிருக்கின்றன. அவாவென் - அவாவென்கிற, இறந்த - அளவிறந்த, ஆழம் - ஆழமானது, அறியவரியது - அறிதற்கரியது, களவு - கரவென்னும், நெருங்கு - நெருங்கிய, பாருமலையு முடையது, பார்களையு மலைகளையு முடையது, கலகம் - கலகமென்னும், விடங்கள் மேவு - விடங்கடங்கிய, கிரிமி நெளிவது - புழுக்கணெளிகின்றன—எ-று. ஏ-அசை. (உ௫)

## இதுவுமது.

கலி:—துகளெனு நன்கிலாத நுரைக டருவது
துறவினி லின்பமான கரையை விடவகல்
மகளி ரெனுந்தவாத வலிய சுழியது
மறலியு மஞ்சகோப வடவை யெரியதே.

(இ-ள்.) துகளெனும் - குற்றமென்கிற, நன்கிலாத - கிஞ்சித் நன்மையில்லாத, நுரைகள் - நுரைகளை, தருவது - தந்துகொண்டேயிருப்பது, துறவினில் - சகலத்தியாகத்தின் கண்ணெழும், இன்பமான கரையை - நிரதிசயானந்தக் கரையை, விட-விட்டுவிட, அகல் - விலக்குகின்ற, மகளிரெனும் - ஸ்திரீகளென்னும், தவாத-நீங்காத, வலியசுழியது - கொடிய

சுழியை யுடையது, மறலியுமஞ்சு - யமனுநடுங்கத் தக்க, கோபம் - கோபமாகிய,வடவையெரியது - வடவானலத்தையுடையது—எ-று. ஏ.அசை. (உ௬)

இதுவுமது.

கவி:—வெருவரு கின்றபோக முதலை யடர்வது
விவித மனந்தமான துறையு மறிபவ
ரொருவர் கடந்து போக விரகி லெழுபவ
வுததி விளம்பயாவ ருலகி லறிவரே.

(இ - ள்.) வெருவருகின்ற - அஞ்சத்தக்க, போகம் - செல்வமென்னும், முதலையடர்வது - முதலைகள் நிறைந்திருக்கின்றன, விவிதம் - நாநாவிதமான, அனந்தமான - அளவின்றிய, துறையும - மார்க்கங்களையும், அறிபவர் - அறிகின்றவர்களில், ஒருவர் - ஒருவராவது, கடந்துபோக - இக்கடலைக் கடந்து செல்ல, விரகில் - யுத்தி யில்லையானால், எழுபவவுததி - எழுபிறப்பென்னும் கடலினளவை, விளம்ப - யாருஞ்சொல்ல, உலகில் - இவ்வுலகின்கண், யாவரறிவர் - எவரறிவாரகள்—எ-று. ஏ-அசை.

இவ்வைந்து கவியின் றப்பரியம்.

சீடனை அகமுகப்படுத்தப் பவத்துன்பத்தின் பயங்கரத்தைப் பகுத்துக் கூறியவாறும். (உ௫)

அ;- ரக:—பவக்கடலின் றீமையைக் கூறி யது நீங்குங் கருவியும் நீங்காக் கருவியு மிஃதெனக் கூறல்.

கவி:—பொறிவழி சென்று மீளு மவல மதிகொடு
பொருசம யங்களாறு மறிய விழுமதி
லறிவழி வொன்றிலாத பொருள தெனவுணா
வனுபவ வங்கமேறு மறிஞ ரகல்வரே.

(இ-ள்.) பொறிவழி - இந்திரியங்கள் வழியாய், சென்று மீளும் - போக்குவரத்துள்ள, அவலமதிகொடு - ஐயந்திரிபறுப்புத்தியென்னுந் தெப்பத்தைக்கொண்டு, பொரு - பொருணிச்சயத்தாலொன்றற்கொன்று முரணுகின்ற, சமயங்களாறும் - ஆறுசமயத்தார்களும், அறிய - முத்தியடைவான் வேண்டி, விழுமதில் - அப்பிறவிக்கடலில்விழுவார்கள், அறிவு - அறிவானது, அழிவொன்றிலாத - அழியாத, பொருளதென - பிரமவஸ்துவெனச் சுருதியுத்திகளா னிச்சயிக்க, உள - அதனாற் சமாதியின்கண் ணுண்டான, அனுபவவங்கமேறும் - சுவானுபவமென்னுங் கப்பலிலேறிய, அறிஞாகல்வர் - அறிவுடையோ ரக்கடலைக் கடப்பார்—எ-று. ஏ-அசை.

அவலம்—பயனின்மை. அஃதாவது ரூபாரூபங்களுங் காதார மிலையதெனத் தேராமை.

(இ-ம்.) தன்னை விகற்பித்துக் காண்பார் பவக்கடலில் விழுதற்கேதுவாய சங்கற்பங்களை யெட்டியறியாத அவலமதியெனவும், விகற்பங்கடோறுந் தன்னைக்காண்பா ரப்பவக்கடற்கரையேறுதற் கேதுவாயது தனது வியாபக விளக்கத்தையி லவ்விகற்பங்கள் கிஞ்சித்துந் தோற்றாத அனுபவவங்கமெனவுங் கூறியவாறும். (உகூ)

அ-கை.—முற்கூறிய வுத்திகளின் முன் கூடாதென்பதையு மேற்கூடுமென்பதையும் வற்புறுத்திக் கூறுதல்.

கவி:—புணரி கடந்துபோக விரகி லெனமொழி
பொழுது புலம்பியாவி 'புதல்வ னிறமுன
மூணர்வெனும் வங்கமேறு மறிஞ ரகல்வரென்
றுரைநயை வழங்கிநாத னுவகை யருளவே.

(இ-ள்.) புணரி கடந்து - பவக்கடலை கடந்து, போக - சமயமார்க்கங்களா லறியு முத்தியாகிய கரையைச்சேர, விரகி லெண - யுத்தியில்லையென்று, மொழிபொழுது - சொன்ன மாத்திரத்தில், புலம்பி - நாமென்செய்வோமென்றழுது, ஆவி புதல்வன் - சீடனுயிரானது, இறுமுனம் - விசனத்தினூற் பிரிவதற்குமுன், உணர்வெனும் வங்கம் - ஞானமாகிய கப்ப லில், ஏறுமறிஞர் - ஏறுமகான்கள், அகல்வரென்று - கடப் பார்களென்று, உரையைவழங்கி-சொல்லைச்சொல்லி, நாதன் - குருநாதன், உவகையருள - சீடனுக்குச் சந்தோஷம்விளைக்க — எ - று. ஏ-அசை.

(இ-ம்.) பிராணபாயமான பயத்தை வருவித்துச் சாம்பி ராச்சியமான பதத்தையடையுஞ் சந்தோஷத்தையு முடனே தோன்றச் செய்தனரென்பதாம். (உஎ)

அ-ரக:—ஆசிரியர்சொல்லிய மகிழ்ச்சியினூற்பவத்துன்ப நீங்கிப் பரமசுகத்தை யடையும்பொருட்டு ஞானனுக்கிரகஞ் செய்யவேண்டுமென விஞதல்.

வேறு.

கவி:—வாழியென விறைவனடி தொழுதுவரு பவமா
மாழியினை யகலுமறி வருளுகென வவரே.

(இ-ள்.) வாழியென - தேவரீரெப்போதும் வாழக்கடவ தென்று, இறைவனடி தொழுது - குருபதத்தைப் பணிந்து, வருபவமாமாழியினை - அடியேனுக்கு மாருது வந்துகொண் டிருக்கும் பவக்கடலை, அகலுமறிவு - நீங்குவதற் கேதுவான ஞானத்தை; அருளுகென - அனுக்கிரகிக்க வேண்டுமென்று சீடனிரக்க, அவர் - அதற்கவ்வாசிரியர்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) வெளிப்படை. (உஅ)

அ-ரை:—உடன் விளைவிற் குத்தரங் கூறத் தொடங்கி ஞானவகை யினையவெனக் கூறல்.

கவி:—பரவறிவு மபரவறி வெனவிருபரிசாந்
திரவறிவை யறியுமவர் மொழிவர் தெளிவுறவே.

(இ-ள்) பரவறிவு - பரஞானமெனவும், அபரவறிவெனவும் - அபரஞானமெனவும், இருபரிசாம் - இரண்டு தன்மையாக விளங்கும். திரவறிவை - திரமான சகசஞானத்தை. அறியுமவர் - அனுபவமாயறியுஞ் சத்துக்கள். மொழிவர் தெளிவுற - இவற்றைத் தெளிவாகச் சொல்லுவார்—எ-று. ஏ-அசை.

(இ-ப்.) சாக்ஷாத்கார ஞானமே தன்வடிவெனக் காணு நிமித்த மறிவின் தொகுப்பைப் பகுத்துக் கூறினதாம். (௨௯)

அ-ரை:—முற்கூறிய ஞானவகைகளின் றன்மையைக் கூறல்

கவி:—அபரவுணர் வருமறைகண் முதலகில கலையு
முபரமம தறவுதவு முணர்வுபர வுணர்வே.

(இ-ள்) அருமறைகண் முதல் - உணர்தற்கரிய வேதங்கள் முதலிய, அகிலகலையும் - சகலவித்தியா ஞானமும், அபரவுணர்வு - அபர ஞானமாம், உபரமமது - அந்தப் பிரம சொரூபத்தை, அற - மிகவும், உதவும் - தானெனத்தரும், உணர்வு - யதார்த்தஞானம், பரவுணர்வு - பரஞானமாம்—எ-று. வ-அசை.

சகல வித்தை யென்றது - இருக்கு. எசுர். சாமம், அதர்வணம். அங்கம் ௬, சாத்திரம் ௪ என்னு மிப்பதினான்கையும்

(இ-ள்.) விசாரகனாலுதிப்பக் காரணமொன்றுஞ் சாஸ்திரங்களை விளக்குவது பரஞானமெனவும் கூறப்படுமென்பதாம். (௩௩)

அ-கை:—முற்கூறிய பரஞானமபரஞான மென்னு மிரண்டனு ளபரஞானத்தி னபிப்பிராயந் தெரிந்தொருவ ரோத வேண்டுமெனல்.

கவி:—புராணமிதி காசமிவை யும்பொருள னைத்தின்
பிராணனறி யாதுள விடத்திவை பிதற்றே.

(இ-ள்.) புராணம் - பதினெண் புராணங்களிலும், இதிகாசம் - பாரதாதி யிதிகாசங்களிலும், இவையும் - இவைபோன்ற மற்றெந்நூல்களிலுஞ் சொல்லுகின்ற, பொருளனைத்தின் - எல்லாப் பொருள்களின், பிராணனை - உயிர்ப்பான வபிப்பிராயத்தை, அறியாதுள விடத்து - தெரிந்துகொள்ளாத விடத்தில், இவை - படித்துக்கொண்ட விவையாவும், பிதற்று - முன்பின கெட்ட பிதற்றலாக முடியும்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) நூல்களிற் கூறு முபக்கிரமோப சங்காரங்களி னபிப்பிராய நன்றாய்த் தெரியி னவற்றின் பயனாகிய வபர ஞான முதிக்குமென்பதாம். (௩௪)

அ-கை:—இவ்விருவகை யுணர்வடைந்தோ ரிங்ஙனமுள்ளாரெனல்.

கவி:—ஆகம விதங்களறி வாரபர மறிவார்
யோகமொடு றங்குமவ ரேபர முணர்ந்தார்.

(இ-ள்) ஆகமவிதங்களறிவார்-வேதங்களிற் கூறும் பல விதமான பொருள்களையுந் தெரிந்தொன்றுபடுத்து நிச்சய ஞானிகளே, அபரமறிவார் - அபரஞான முணர்ந்தோராவர், யோகமொடுறங்குமவரே - பிரமத்தி லொன்றுபடச் செய்யுஞ் சமாதி ஞானிகளே, பரமுணர்ந்தார் - பரஞான முணர்ந்தவ ராவர்—எ - று.

(இ-ம்) வேதாகமங்களிற் கூறிய மரபின்படி கலாசோதனை செய்து தத்துவஞ் சேடித்த வஸ்துவே பரமெனை நிச்சயமாகத் தெரிந்தவ ரபரஞானிகளெனவும், அப்பரத்தோ டடங்குஞ் சமாதிஞானிகளே பரஞானிகளெனவும் பொருள்படக் கூறிய வாறும். (௩௨)

அ-கை:—ஞானமிணையதெனவு மஞ்ஞான மிணையதெனவும் விளக்கல்.

கலி:—இயலறிவ திசையறிவ தினமறிவ துளதா
மயலறிவ தறிவதல வறிவறிவ தறிவே.

(இ-ள்.) இயலறிவ திசையறிவ தினமறிவது-இயலிசை நாடகமென்னு முத்தமிழையுந் தீரவறிவது, உளதாம்-உண்டாயிருக்கும் (ஆயினுமஃது), அயலறிவது - தன்னை வேறாயறிவதேயன்றி, அறிவதல - தன்னை யுள்ளவாறறியு ஞானமல்ல, அறிவறிவது - அறிவு கற்பிதமின்றித் தன்னைத்தானாக வறிவது, அறிவு - யதார்த்தஞானமாம்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) எதிரிட்ட விடய ஞானத்தை யறிவ தஞ்ஞானமெனவும் எதிரீடின்றித் தன்னைத் தானாயறிவது திரஞானமெனவும் கூறியவாறும். (௩௩)

அ·கை:—கலைவல்லோரானும் பிரமத்தி னுண்மைகிலை யறியப்படா தெனல்.

கவி:—நவிலுகலை யறுபத்து நாலுமறி வாரும்
பவலயம தறுசுத்த பரமமறி யாரே.

(இ-ள்.) நவிலு - சொல்லப்பட்ட, கலை யறுபத்துநாலும் - அறுபத்து நான்கு கலை ஞானங்களையும், அறிவாரும் - தெரிந்தபேர்களும், பவலயமதறு - உற்பத்திநாசமில்லாத, சுத்தபரம மறியார் - சுத்தப் பிரமத்தை யறியமாட்டார்கள்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) எல்லாந் தெரிந்துகொண்ட தன்னைத் தெரிந்து கொள்ளாமையா னிதுவும் விடயஞானமே யன்றிப் பரஞான மன்றென்பதாம். (௩௪)

அ-கை:—ஞானஞ்ஞானதசையிற் புலப்படாததும் புலப் படுவது மிவையெனக் கூறல்.

கவி:—ஆகவறி வாளரறி வாரிவை யனைத்து
மேகவறி வாளரிவை யாவுமறி யாரே.

(இ-ள்.) ஆகவறிவாளர் - தேகோகமென்னும் விடயஞானிகள், அறிவா ரிவையனைத்தும் - இங்ஙன மதலிதுவெனச் சுட்டத் தகுவனவனைத்தையு மறிவார்கள், ஏகவறிவாளர் பூரண ஞானமுடையோர், இவையாவுமறியார் - சுட்டப்பொருளாகிய விவையனைத்தையு மறியமாட்டார்கள்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) ஞானஞ்ஞானத்தின் றன்மை யிஃதெனத் தெரிவித்ததாம். (௩௫)

அ-கை:—பரஞானத்தை நீக்கித் திரஞானத்தை நிரூபித்தல்

கவி:—ஐயறி வறிந்தவை யடங்கினவ ரேனு
மெய்யறிவி லாதவர்கள் வீடதுபெ றாரே.

(இ-ள்.) ஐயறிவு - பஞ்சேந்திரியமென்னு முணர்வை, அறிந்து - உள்ளவா றவற்றி னியல்பாற்றெரிந்து, அவை - அப்பஞ்சவுணர்வு, அடங்கினவரேனும் - தம்மு ணசிக்கக்கற்ற ஞானிகளாயினும், மெய்யறிவிலாதவர்கள் - ஐக்கியமான திரஞான மில்லாதவர்கள், வீடதுபெறார் - முத்தியடையார்கள் —எ-று.

(இ-ம்.) கூடத்தப் பிரமமென்னும் பேத நீங்கிச சுயமாய் விளங்கு ஞானமே வஸ்துவாதலி னதனைத திரஞானமெனக் கூறினு ரென்பதாம். (௬௬)

அ-கை:—முன்னர்ப்பரஞான மபரஞானமென்ற விரண்டையு நீக்கித் திரஞானமாவ தினையதெனக் கூறல்.

கவி:—பூசனையு மதுசகல பொருளுமறி தமையு
மீசனையும் வேறதற வறிவதறி வெனலே.

(இ-ள்.) பூசனையும் - ஆராதித்தலையும், அது சகலபொருளும் - அதற்கு வேண்டிய தேனுதிய திரவியங்களையும், அறிதமையும் - சிவத்தைத் தியானிக்கின்ற வான்மாவாகிய தம்மையும், ஈசனையும் - ஆராதித்தலை யேற்கத்தக்க சிவத்தையும், வேறதற - பேதமின்றி, அறிவது - தானுய்விளங்குவது, அறிவெனல் - சுயஞ் சைதன்னியமெனப்படுவதாம்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) அது விது வென்னுஞ் சுட்டின்றி யாவுந் தன்மயமாய் விளங்குவதே திரஞான மென்பதாம். (௬௭)

அ-கை:—முற்கூறிய ஞானத்தையே வற்புறுத்திக் கூறு

கவி.—மெய்ம்மையறி வல்லதமில் வேறறிவ தெல்லாந்
தம்மையறி யும்மறிவ தேயறிவு தானே.

(இ-ள்.) தமில் - தமக்கு, வேறறிவதெல்லாம் - புறம்பாயறியப்பட்ட யாவும், மெய்ம்மை யறிவல்ல - சுயஞ்சித்தல்ல, தம்மையறியும் - தன்னைத்தானே யறிகின்ற, அறிவதே - அத்திர ஞானமே, அறிவுதான் - தானாகிய ஞானமாம்—எ-று. ர-கை.

மெய்ம்மையறி வல்லவென்றது மித்தையான வஞ்ஞானத்தை.

(இ-ம்.) சர்வம் பிரமமய மிஃதவை யன்றென்னும் பிரமோபதேசப்படி சிவேசுர கூடத்தப் பிரமாதியான சகலத்தையும் நீக்கிச் சேடித்துநின்ற ஞானமே தன்மய ஞானமென உபதேசித்தா ரென்பதாம். (௧அ)

அ-கை:—'தம்மையறியும் மறிவதே யறிவுதானே' என்றதைக் கேட்ட மாணக்க னிஃதுண்மையாயி னெல்லாருந் தன்னைத்தானறிந்தவர்களாகவேண்டுமே, அறிந்தவர்களாயின் சுகதுக்கத்திற் பாதபித்துக்கொண்டு சரிதாதி சற்கிருத்தியங்களையூணுறக்கங்களிற் சிரத்தையின்றி யரிய தவத்தான் மெலிந்தியற்றுவானேன்? இயற்றுதலி னிவ்வுடலைத் தானென வ் ஞானமன்றுகையின் றுனென்பதற்குப் பொருள் வேறுண்டுபோற் றோற்றுகின்றது. இவ்வையத்தை யகற்றவேண்டுமெனக் கேட்டல்.

கவி:—தானெனு முடம்பிது தனைத்தனிர வேறு
யானெனு மருத்தமுள வோவருளு கெனவே.

(இ-ள்.) தானெனும் - யாவருந் தானென்று சொல்லும், உடம்பிது தனைத்தவிர - இத்தேகத்தை யன்றி, வேறாய் - வேறாக, யானெனும் - தானென்கிற, அருத்தமுளவோ - பொருளுண்டோ, அருளுகென - அநுக்கிரகஞ் செய்யவேண்டுமென அச் சீடனிரந்து கேட்க—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) தனக் கநுபவமாயுள்ள தூலதேகத்தை யன்றித் தானென்பதற்குப் பொருள் வேறு கண்டிலன், உளதாயி னிருக்கக் காட்டவேண்டு மென்பதாம். (௩௩)

அ-கை:—அதற்காசிரிய ரருத்தம் வேறுண்டெனத் தோன்ற விதனைக் களைவான் வேண்டி யித்தூலதேகம் கிழமை. அசேதனம், அகர்த்தத்துவம், அசுத்தம், சடம் போலியியக்கம், அன்னியம், பௌதிகமென்னு மிக்குணங்களை யேற்கப் பாலதென்றுணர விக்கவியிற் கிழமையாங் குண முணர்த்தல்.

## வேறு.

கவி:—எனதாடை பொன்பூ மகன்றையல் பாய்மா
 விபங்கண் முகங்கால்கை மெய்யென்ன வென்றுந்
 தனதா யுரைபபான் வகுத்திந்த வூனைத்
 தானென் றயர்த்துஞ் சொலத்தக்க தன்றே.

(இ-ள்.) எனது - என்னுடைய, ஆடை - வஸ்திரம், பொன் - தனம், பூ - நிலம், மகன் - புத்திரன், தையல் - பெண்சாதி, பாய்மா - தாவுகின்றகுதிரை, இபம் - யானை, கண் - கண்கள், முகம் - முகம், கால் - கால்கள், கை - கைகள், மெய் - உடம்பு, என்ன - என்று, வகுத்து - வேறுபிரித்து, என்றும் - எப்போதும், தனதாயுரைப்பான் - ஒருவன் தன்னுடையதாகச் சொல்லுவன், (ஆதலின்) இந்தவூனை - இந்த மா

மிசவுடலை, தானென்று - தானாக, அயர்த்தும் - மறந்தும், சொலத்தக்கதன்று - சொல்லத் தக்கதல்ல—எ-று. ஏ-அசை.

ஆடையாதியிபமீறு - பிறிதின்கிழமை; கண்ணாதி மெய்யீறு - தற்கிழமை.

(இ-ம்.) எனதெனப் படுதலி னித்தேகந் தானன்றென்பதாம். (௩௦)

அதைகை:—அசேதனமாங் குணமுணர்த்தல்.

கவி:—தாளாக வூராழி யார்வெங்கில் வீணாத்
தண்டாக வன்மார்பு தட்டாக மொட்டா
நாளா மலர்ச்சென்னி கூந்தற் கொடித்தேர்
நானாரூ மூர்வானின் வேறாக நாடே.

(இ-ள்.) தாள் - கால்கள், ஊராழியாக - ஊருஞ் சக்கரமாகவும், வெங்கில் - முதுகிலுள்ள, வீணாத்தண்டு - முதுகெலும்பு, ஆராக - ஐந்துருவாணியாகவும், வன்மார்பு - வலியமார்பானது, தட்டாக - பீடமாகவும், நாளாமலர் - அன்றலருந் தாமரைமலர்போன்ற, சென்னி - சிரசு, மொட்டா - தாமரை யரும்பு போன்ற சிகரமாகவும், கூந்தல் - சிரமயிர், கொடி - கொடி யாகவு மிருத்தலின், தேர் - இத்தேக ரதமானது, நாணாளும் - அனுதினமும், ஊர்வானின் - நடத்துவோனுக்கு, வேறாக நாடு - அன்னியமாகக் காணுதி—எ-று. ஏ-அசை.

இவ்வங்கங்களாற் றேருக்கொத்து நிற்றலி னிவ்வுடலைத் தேரெனவும், ரதாரூடனுக்குரதம்போன் றான்மாவுக் குடலன்னியமாக நிற்றலின் ஊர்வானின் வேறெனவுங்கூறினார். கூறவே யித்தேக மநாத்மப்த்தியா லசேதனமென்பது பெற்றாம்.

(இ-ம்.) தேக மசேதனமெனவுந் தேகி சேதனனெனவுங் கூறியதாம். (௪௧)

அ-கை:—அகர்த்தத்துவமாங் குணமுணர்த்தல்.

கவி:—கடக்குஞ்ச ரம்பண்ணி யுண்ணின் றொருத்தன்
கைபாத கன்னங்கள் மெய்போ லியக்குங்
கிடக்குந் நடத்தா விடத்திவ் வுடம்புங்
கிடக்கும் மொருத்தன் னடத்தா விடத்தே.

(இ-ள்.) கடக்குஞ்சரம்பண்ணி - மூங்கில் முதலியவற்றால் மதயானைபோலச் செய்து, உண்ணின் றொருத்தன் - ஒருவனுள்ளே புகுந்துகொண்டு, கை - தும்பிக்கையையும். பாதம் - கால்களையும், கன்னங்கள் - காதுகளையும், மெய்போல் - நிசம்போல, இயக்கும் - அசைப்பன், நடத்தாவிடத்து - அவனசைக்காதபோது, கிடக்கும் - அதுவறிதிருக்கும், (அதுபோல) இவ்வுடம்பும் - இத்தேகமும், ஒருத்தன் - ஒரு புருடன், நடத்தாவிடத்து - அசைக்காதபோது, கிடக்கும் - சவமாகப் பூமியில் விழுந்துகிடக்கும்—எ-று. ஏ-அசை.

இதனால் அசைவாதிகட்குப் போலி யானைபோன்று வசனாதிகட்கு இத் தூலவுடல் கர்த்தத்துவ மன்றென்பது பெற்றாம்.

(இ-ம்.) எல்லாச் சேட்டைகட்குங் கர்த்தத்துவந் தேகியேயன்றித் தேகமன்றென்பதாம். (௪௨)

அ-கை:—அசுத்தமாங் குணமுணர்த்தல்.

கவி:—ஒருகூறு மனமாகு மொருகூறு மலமாகு
மொருகூ றுடம்பாகு முண்டற்ற வன்ன
மிருகூறு நீயாகி லொருகூறு நீயா
மிழிக்கும் மலஞ்சோ ரிடப்பட்ட துடலே.

(இ-ள்.) உண்டற்ற வன்னம் - புசித்துச்சீரணிக்கப் பெற்ற வாகாரமானது, ஒரு கூறு - ஒரு பங்கு, மனமாகும் - மனமாகப் பிலக்கும், ஒருகூறு - ஒருபங்கு, மலமாகும் - மலமாக நீங்கும், ஒருகூறு - ஒருபங்கு, உடம்பாகும் - தேகமாகப் பருக்கும், இருகூறு - இவற்றுளிரண்டுபங்கு, நீயாகில் - நீயானல்,ஒருகூறு நீயாம்-மற்றொருபங்கு நீயாவை, (அதுநீயாகத் தக்கதன்று) இழிக்கும் - யாவரானு மருவருக்கத்தக்க, மலம்-அமேத்தியம், சோரிடப்பட்டது - கசிந்துகொண்டிருக்கப் பட்டது, உடல் - தூலவுடலாதலின்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) தூலவுடனுனென்பதைக் களைவான்வேண்டி யிங்ஙனங்கூறினு ரென்பதாம். (௪௩)

அ-கை:—சடமாங் குண முணர்த்தல்.

கவி:—கிளரா தரத்துண் ணு மன்னஞ் சுடக்கை
கிட்டப் பொருதே யிருந்தார் கிடந்தார்
தளரா துறப்பொன்று முயிர்போக வன்றே
தழற்பள்ளி மீதே துயின்றார் சகித்தே.

(இ-ள்.) கிளர் - மிகுந்த, ஆதரத்து - ஆசையினுல், உண்ணும் - புசிக்கின்ற, அன்னஞ்சுட - அன்னமானதுசுட, கை - கையானது,கிட்ட-அவ்வன்னத்திற்குச் சமீபிக்க, பொருதே - சகிக்காமலே, இருந்தார் - இருந்தவர்கள், கிடந்தார் - படுக்கையானவர்களாய், தளராதுறப் பொன்றும் - அவயவங்களிலொன்றுங் குறையாமல், உயிர்போக - உயிர்நீங்க, அன்றே-அக்கணமே, தழற்பள்ளிமீதே-அக்கினிமெத்தையில், துயின்றார் சகித்தே-சகித்து நித்திரைசெய்தார்கள்—எ-று.ஏ-அசை.

(இ-ம்.) அக்கினியி னுஷ்ணசத்தியை யுணரற்பாலது இவ்வுடம்பன் றென்பதாம். (சுசு)

அ-கை:—போலி யியக்கமாங் குண முணர்த்தல்.

கவி:—நிழற்பாவை கண்ணாடி யிற்பாவை கைகா
னிமிர்க்கு முடக்கு மிவன்செய்யு மெல்லாத்
தொழிற்பாலவாமற்றிவ் வுடலஞ்செய்தொழிலுஞ்
சுடர்ஞான வடிவான வன்செய்த தொழிலே.

(இ-ள்.) நிழற்பாவை - ரவியாதியாற்காணப்பட்டதேகச் சாயையும், கண்ணாடியிற்பாவை - ஆடியிற்காணப்படுந் தேகச் சாயையும், கைகால் - அத்தபாதங்களை, நிமிர்க்குமுடக்கும் - நீட்டு முடக்கும், (இவையெல்லாம்) இவன் - இம்மனிதன், செய்யும் - செய்கின்ற, எல்லாத்தொழிற்பாலவாம் - சமஸ்த கிரியா வண்ணமாம், (அதுபோல) இவ்வுடலஞ்செய் தொழி லும் - இத்தேகஞ் செய்யுங்கிரியைகளும், சுடர் - சதோதய மாகப் பிரகாசிக்கின்ற, ஞானவடிவானவன் - ஞானசொரூபி யான வாத்மா, செய்ததொழிலே - செய்யுந் தொழில்களே யாம்—எ-று. மற்று-அசை.

(இ-ம்.) தேகியின தியக்க மித்தேகத்ததாகத் தோற்று மென்பதாம். (சுரு)

அ-கை:—அன்னியமாங் குண முணர்த்தல்.

கவி:—அறிகின்ற பொருளென்று மறிவானின் வேறே
யானவிவ் வூனை நானென்ன லாமோ
செறிகின்ற புள்ளல்ல வேகூடிவ் வகையே
செடமானவுடனின்னில்வேறென்றுதெளியே.

(இ-ள்.) அறிகின்றபொருள் - அறியப்படும் வஸ்துக்கள், என்றும் - எப்போதும், அறிவானில் - அறிபவனுக்கு. வேறேயானால் - புறமாகவே யிருக்குமானால், இவ்வூனை - இம்மாமிச நிறைந்ததேகத்தை, நானென்னலாமோ - நானென்று சொல்லலாமோ, செறிகின்ற புள்ளல்லவே கூடு - அடைந்திருக்கின்ற பட்சியல்லவே கூண்டானது, இவ்வகையே - இவ்விதமாகவே, செடமானவுடல்-சடவடிவமான வித்தேகம், நின்னில் தானானவனுக்கு, வேறென்றுதெளி - அன்னியமென்று தெளிந்துகொள்வாய்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) ஆத்மாவே தானென்பதை யறிவித்ததாம்.(சசு)

அ-கை:—இத்தேகம் பௌதிகமாந் தன்மையுணர்த்தல்.

கவி:—நிலமாகும் வற்பென்ற னெகிழ்கின்ற னீரா
நெருப்பா மிதிற்சுட்ட வெல்லாமு மனிலஞ்
சலமான புரையான வானிந்த வுடலஞ்
சடமான வைம்பூத வுருவங்க டாமே.

(இ-ள்.) நிலமாகும்வற்பென்றல் - கடினமென்றது பிருதுவியாம், நெகிழ்கின்ற னீராம் - நெகிழ்ச்சியையுடைய தப்புவாம், இதிற்சுட்டவெல்லாமும் - யாவற்றையுமெரிக்குந் தொழிலை யுடையவிது, நெருப்பாம் - அக்கினியாம், அனிலஞ் சலமான - சலிப்பையுடையது வாயுவாம், புரையானவான் - புரையையுடைய தாகாயமாம், இந்தவுடலம் - இத்தேகமும், சடமான - சடத்தன்மையான, ஐம்பூதவுருவங்கடாமே - பஞ்சபூதங்களி லேகதேசமா யுண்டான வடிவங்களாம்—எ-று.

(இ-ம்.) பஞ்சபூதகாரியமான தூலதேகஞ் சடமாதலின் ருனல்லவென நீக்கினதாம். (சஎ)

அ-கை:—இவ்வேதுக்களாற் றூலதேகந் தானன்றென வங்கீகரித் திதனை யறியுங் கண்ணுதிய ஞானேந்திரியங்க டானாக வேண்டுமெனக் கருதிய சீடனைநோக்கி யவைகளுந் தானல்லவெனக் களைதல்.

கவி:—விழியைப்புமானென்னில் ரவியாதியாலே
விளக்கஞ்செயுமற்ற வுருவத்தை யற்றே
லொழியப் படுங்கன்ன முதலுனு மவனன்
றுருக் கண்டகண்டன்னை யொப்பாக வுன்னே.

(இ - ள்.) விழியைப்புமானென்னில் - இத்தூலதேகத்தை யறியுங் கண்ணையான்மா வெனக்கொள்ளில், ரவியாதியால்-சோமசூரியாக்கினியினால், மற்ற வுருவத்தை-கண் தவிர மற்ற வுருவங்களை, விளக்கஞ்செயும் - விளக்குவிக்கும், அற்றேல் - அத்தன்மைத்தாயின், ஒழியப்படும் - அதுநீங்கலாகிய, கன்னமுதலுனும் - சுரோத்திரமுதலிய நான்குமோ, அவனன்று - அவ்வாத்மாவல்ல, உருக்கண்டகண்டன்னை - உருவத்தை யறிந்த கண்ணை, ஒப்பாகவுன்னே-சமானமாகக் கருதுவாய்—எ-று.

(இ-ம்.) இவ்வேதுக்களாற் சுரோத்திராதிய ஞானேந்திரியமைந்துந் தானன்றென்பதாம். (சஅ)

அ-கை:—முன்ஞானேந்திரியந் தானல்ல வென்றபடி கன்மேந்திரியமுந் தானன்றெனக் களைதல்.

## வேறு.

கவி:—அழலுண்பொருள் களிலுண்பவை முக்கூறதின்
றணியென்பு நடுக்கூறதுமச்சைசக்கிடனுகு [முற்கூ
றெழில்கொண்டகடைக்கூறதுவாக்காயெழுமென்றே
யியனான்மறை யந்தங்க ளிசைக்கின்றன வாமே.

(இ-ள்.) உண்பொருள்களில் - உண்ணத்தக்கவைகளில், அழல் - உதராக்கினியினுல், உண்பவை - சீரணித்தசாரமானவை, முக்கூறு - மூன்றுபங்காம், அதின்முற்கூறு - அச்சாரங்களில் முதற்பங்கு, அணியென்பு - தரிககப்பட்ட வஸ்தியாம், நடுக்கூறது - நடுப்பங்கானது, மச்சைக்கிடனுகும் - மாமிசத்துக் காதாரமாம், எழில்கொண்ட - அழகிய, கடைக்கூறது - கடைப்பங்கானது, வாக்காயெழுமென்று - வாக்கிந்திரியமாமென்று, இயனான்மறை யந்தங்கள் - இயல்பாயுள்ள நான்கு வேதங்களின் முடிவாகிய வுபநிடதங்கள், இசைக்கின்றனவாம் - சொல்லுகின்றனவாம்—எ-று.

எனவே, பிருதிவியி னமிசமாகி யுணவின் சார வாகாரமாத் தடித்தது எலும்பு, மாமிசம், வாக்கிந்திரிய மாதலின் கன்மேந்திரியமைந்தனுள் பிரதமையாயுள்ள வாக்கிந்திரியந் தானுகா விடத்து மற்றைய நான்குந் தானன்றெனக் குறிப்பிக்கப்பெற்றும். சாரமாகிய காரியத்தைக் காரணமாக வுபசரித்தார்.

(இ-ம்.) இவ்வேதுக்களாற் கன்மேந்திரியமுந் தானன்றென்பதாம். (௭௧)

அ-ஙக.—முன்னர்ப் புறக்கரண நிக்கிரகஞ் செய்தபடி யகக்கரணங்களை நியதிகளையத் தொடங்கி அவற்றிற் பிராணவாயுவை நியதிகளைதல்.

கவி:—உண்ணும்புனல் மூக்கூறதின் முற்கூறு வர்நீரா
முதிரந்நடு விற்கூறு கடைக்கூறு பிராண
னெண்ணும்மிதி லிருகூறவை நீயாயிடி னன்றோ
விறுகின்றபிராணன்னது நீயாகுவதிசையே.

(இ-ள்.) உண்ணும் புனல் - பானஞ்செய்யுஞ் சலாகாரம், மூக்கூறு - மூன்றுபங்காம், அதின்முற்கூறு - அவற்றின் முதற்பங்கு, உவர்நீராம் - மூத்திரமாம், நடுவிற்கூறு - நடுப்பங்கு, உதிரம் - இரத்தமாம், கடைக்கூறு - கடைப்பங்கு, பிராணன் - பிராணவாயுவாம், எண்ணும் மிதில் - எண்ணிக்கையுள்ள விம்மூன்றனுள், இருகூறவை - இரண்டுபங்காயவை, நீயாயிடின. ன்றோ - நீயானலல்லவா, இறுகின்ற - நசிக்கின்ற, பிராணன்னது - பிராணவாயுவானது, நீயாகுவது - நீயாகவேண்டுவது, இசை - இதனைச் சொல்லுதி—எ-று. ஏ-அசை.

இதுவுங் காரியத்தைக் காரணமாக வுபசரித்தல். (ரு0)

அ-ஙக.—இந்திரிய மடங்கிய விடத்தும் பிராணனிருக்கைக் கேது கூறல்.

## வேறு.

கவி:—பிராணனு மல்லதுஞ்சி லுணர்வின்மை யால
துணரும் புலன்க ளொழிவாற்
பிராணன தென்னைமன்னை யொழியாது சேனை
நகர்சூழ் வலஞ்செய் பொழுதே.

(இ-ள்.) துஞ்சிலுணர் வின்மையால் - நித்திரையி லறி தற் றன்மையில்லாததினாலும், அது - அந்தப்பிராணவாயு. உணரும் புலன்கள் - விடயங்களை யறியு மிந்திரிய சம்பந்தம், ஒழிவால் - விட்டிருப்பதினாலும், பிராணனுமல்ல-பிராணவா யுவுந் தானல்ல, (ஆயின்) பிராணன தென்னே - பிராணவாயு வினியக்கமேதெனின், மன்னே - கூடாரத்தி னித்திரைசெய் யு மரசனே, ஒழியாது - விட்டு நீங்காமல், சேனே - சேனைகள், நகர் - பட்டணத்தை, சூழ்வலஞ்செய்பொழுது - காவலாகச் சுற்றிவரு மவசரத்தைப்போலும்—எ-று. ஏ-அசை.

எனவே, அரசனிருக்கு மிடத்தைச் சேனை காப்பதுபோ லான் மாவிருக்குமிடத்தைப்பிராணன் காக்கின்ற தெனவும், உணரும் புலன்களொழிவா லென்பதினாற் சொப்பனுவத்தை யெனவும் பெற்றும். (ருக)

அ-கை:—அந்தக்கரணமடங்கிய விடத்தும் பிராணனிருக் கைக் கேதுகூறல்.

கவி:—கரண மொடுங்கவாயு நிகழ்வெஃகொ லென்னி
னுடல்காவ லாகு மிலதேன்
மரண மடைந்ததென்று தமர்சுட் டிடாமுன்
வளைவாலின் ஞாளி கொளுமே.

(இ-ள்.) கரணமொடுங்க - கரணங்க ளடங்கின விடத் தும், வாயு - பிராணவாயு, நிகழ் வென்கொ லென்னில் - சலி ப்பதற்கே தென்னையெனில், உடல்காவலாகும் - தான்வசிக் கின்ற தேகத்திற்குக் காவலாகும், இலதேல் - அக்காவலில் லையாயின், மரணமடைந்த தென்று - ஆன்மா நீங்கிவிட்ட தென்று, தமர் சுட்டிடா முன் - பந்துக்கள் தகனஞ் செய்

வதற்குமுன்னமே,வளைவாலின்-வளைந்தவாலையுடைய, ஞாளி கொளும் - நாயுட்கொள்ளும்—எ-று. ஏ-அசை.

சேவகனரசனை விட்டு நீங்காததுபோல் பிராணனுஞ் சீவனை விட்டு நீங்காதெனவும், காரணமொடுங்க வென்பதினாற் சுழுத்தியவத்தை யெனவுங் கொள்க.

(இ-ம்.) பிராணாதி வாயுக்களுந் தானல்லவென நீபு திகளைந்ததாம். (ருஉ)

அ-கை:—முன் பிராணாதிகளை நீக்கினமாத்திரத்திலவற்றைப் பிரேரகஞ் செய்யு மனாதி யந்தக்கரணங்களைத் தானென்ற சீடனை நோக்கியவையு மன்றெனக் கூறுவான் றொடங்கி மனம் புத்தி யிரண்டும் நீ யன்றெனக் களைதல்.

கவி:—இனமுற வெண்ணவுள்ள கரணத்தி னொன்றி
தெனலா லிதென்ன தெனலான்
மனமுன மன்னமென்ற வதனாலு மல்ல
மதியல்ல வந்த வகையே.

(இ-ள்) இனமுறவெண்ணவுள்ள - சமட்டியென்றன்னத்தகக, காணத்தின் - அந்தக்கரணங்களில், ஒன்றிதெனலால்-ஈதொன்றென்பதினானும், இதென்னதெனலால் - என் மனதென்றதினானும், மனமுனமன்ன மென்றவதனாலும் - முன்னமே மனது அன்னசார மென்றதனானும், அல்ல - மனமுந்தானல்ல, அந்தவகையே - அவ்வாறே, மதியல்ல - புத்தியுந்தானல்ல—எ-று. ஏ-அசை.

சாமாணியத்தா லெவ்வுயிர்க்காணங்களு மோரினமாகுமொருமைபற்றிச் சமட்டியாதலின் இனமுறவெண்ணவுள்ள காணத்தின் எனவும், விசேடத்தாற் றனித்தனி யவ்வவ்

வுயிர்க்காரணமச்சமட்டியி னேகதேச வியட்டியாதலின் ஒன்றி தெனலாமெனவும், தானொருமுதலாகா தொன்றிற்குக் கிழமையாக நிற்றலின் இதென்னதெனலா மெனவுங் கூறினார். முன்னர் "எனதாடைபொன்பூ மகன்மனையல்பாய்மா"வென்ற கவியிற் றூலதேகத்தை யெனதென்றது பிறிதின்கிழமையும் இக்கவியில் மனதையெனதென்றது தற்கிழமையு' மென்க.

(இ-ம்.) மனதையு மதன் சம்பந்தமான புத்தியையுந் தானல்லவென நியதிகளைந்ததாம். (௫௩)

அ-கை:—அகங்காரமுந் தானன்றெனை நிரூபித்தல்.

வேறு.

கவி:— இடரின் புளதாய் நிலையற் றறிவற்
றெண்ணுங்கர ணங்க ளிலாயெவரு
மடரும் பிறவிக் கடியென் றுணரு
மகங்காரமு நீயல வென்றறியே.

(இ-ள்.) இடரின்புளதாய் - துன்பமே யின்பமாகவும், நிலையற்று - நிலையில்லாமல், அறிவற்று - தன்னையறியு முணர் விழந்து, எண்ணுங்கரணங்களிலாய்-நான்கென வெண்ணு மந் தக்கரணங்களி லொன்றாகவும், அடரும் பிறவிக்கு - நெருங் கிய சன்மங்களுக்கு, எவரும் - யாவரும், அடியென் றுணரும்- மூலமாகவு முணரத்தக்க, அகங்காரமும் - அகங்காரமும், நீயலவென்றறி - உனதெதார்த்த சொரூபமல்லவென்றறிதி --எ-று.

(இ-ம்.) விஷயங்களை நானென் றபிமானிக்கு மகங்கார முந் தானல்லவென நீக்கியதாம்.

அ-ஙக:—சித்தமுந் தானன்றெனக் களைதல்.

கவி:—ஐயப் படலோர் பொருணிச் சயமா
யறியப்பட லியானென தென்றுமதஞ்
செய்யப் படல்செய் வதுசிந் தனையாஞ்
சித்தம்மது வன்றென நீதெளியே.

(இ-ள்.) ஓர் பொருள் - ஒருபொருளை, ஐயப்படல்-மனதிறற்சம்சயித்தலும், நிச்சயமாயறியப்படல் - புத்தியினனிசசயித்தறிதலும், யானெனதென்று - அகஙகார மமகாரமாக. மதஞ்செய்யப்படல் - மதஙகொள்ளுதலுமாகிய செயல்களை, செய்வது - செய்கின்றதிறமுனே, சிந்தனையாம் - சிந்தனைவடிவமாயுள்ள, சித்தம்-சித்தமும், அதுவன்றென - அவ்வான்மாவாகாதென்று, நீதெளி - நீதெளிந்துகொள்வாய்—எ-று.

(இ-ம்.) சித்தமுந் தானல்லவென நீக்கியதாம். (ரு௫)

அ-கை:—தூல முதலிய நான்கும் நீயல்லவெனக் களைதல்.

கவி:—முன்னுக வுடம்பது சித்தமதே
முடிவாக மொழிந்த பொருட்டிரடா
னின்னுகில நீயறியும் பொருளாய்
நிகழ்கின்றத னலென நின்மலனே.

(இ-ள்.) முன்னுகவுடம்பது - தேகமானதாதியாக, சித்தமதேமுடிவாக - சித்தமானதீறாக, மொழிந்த-சொல்லிய, பொருட்டிரடான் - விடயசமுகங்கள், நீயறியும் பொருளாய் - உன்னலறியப்படும் பொருளாக, நிகழ்கின்றதனல் - விளங்குகின்றதினல், நின்னுகில - உனதெதார்த்தவடிவமல்ல, என நின்மலன் - என்றுமலரகிதரான குருமூர்த்தி சொல்ல—எ-று.

(இ-ள்.) ஸ்தூலசூக்குமங்களைத் தானல்லவென நீக்கின வாறு.

அ-கை:—இங்ஙன மருளிச்செய்த வாசிரியரை நோக்கி யிருத்தி நீங்கினவிடத்துள்ளது சூனியமாதலின் இதுதானோ நானாகுவதென மாணாக்கன் வினாதல்.

கவி:—உன்னை யறியப் படுமியா வையுமுன்
னுருவன் றெனவே யோதினை யொக்குமெனக்
கென்னை யறியா தொழியும் பொருளோ
யானாகுவ தென்றனை யென்றலுமே.

(இ-ள்.) உன்னாலறியப்படும் - உன்னாலறியப்பட்ட, யாவையும் - சகலவஸ்துக்களும், உன்னுரு வன்றென - உனது சொரூபமல்லவென்று, ஓதினை - உரைத்தீர், ஒக்குமெனக்கு - என்னனுபவத்திற் பொருந்திருக்கின்றது, என்னாலறியாது - என்னாலறியப்படாமல், ஒழியும்பொருளோ - ஒழிந்திருக்குஞ் சூனியமாகிய காரணசரீரமோ, யானாகுவது - நானெனப்படுவது, என்றனை - என்றுமாணாக்கன்வினவினன், என்றலும் - என்று வினவலும்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) அறிபடும் பொருளனைத்துந் தானல்லவென்ற தனாலறியப்படாதசூனியந்தரிசனமாயிற்றென்பதாம். (௫௭)

அ-கை —அறியாமையாகிய காரணதேகமுந் தானல்ல வென நிரூபித்தல்.

கவி:—அறியாப்பொருள் காரண மாயைகுறித்
தறியும்பொருள் காரிய மாமுலகின்
நெறியாற்றிகழ் நான்மறை யந்தமெலா
நீயன்றென வோது நிரந்தரமே.

(இ-ள்.) அறியாப்பொருள் - அறியப்படாத வஸ்து. காரணமாயை - மூலாஞ்ஞானமாம். குறித்தறியும்பொருள் - இஃதெனக் குறித்தறியப்படும் வஸ்து. காரியமூலது - காரியமானசகத்தாம், இந்நெறியால் - இம்மார்க்கத்தினல், திகழ் நான்மறை - விளங்காநின்ற நான்குவேதங்களினை, அந்தமெல்லாம் - முடிவாயுள்ள வுபநிடதங்களனைத்தும், நீயன்றென - இவ்வறிவறியாமை நீயல்லவென்று, ஓது நிரந்தரம் - இடைவிடாமலெவ்விடத்து மெடுத்துச்சொல்லும் — எ-று. ஏ-அசை.

(இ-ம்.) அறியப்படுந் தூலசூக்குமத்தோ டறியப்படாத காரணதேகத்தையுமறிய நின்றிலேனென்பதாம். (௫௮)

அ-கை:— அங்ஙனங் கலந்தவிடத்துச் சாருகவினைநுவ தினையதெனவும் மஃதின்னதற்குப் புலப்படுமெனவுங் கூறல்.

**கவி:**— அறியும் பொருளன் றறியாப் பொருளன்
றறிவாகிய நீயெனு மப்பொருடான்
பொறியின் வழிநின் றறியும் பொருளோ
போதக் கண்விழித் தறியும் பொருளே.

(இ-ள்.) அறிவாகிய - அறிவேவடிவாயுள்ள, நீயெனுமப்பொருடான் - நீயென்னு மந்தத்துரியப்பொருளானது, அறியும் பொருளன்று - திருசியமுமல்ல, அறியாப்பொருளன்று - அதிருசியமுமல்ல, (ஆயின் அஃது) பொறியின்வழிநின்று-மனதினைம்பொறி மார்க்கமாக நின்று, அறியும்பொருளோ - காணும் வஸ்துவோ, போதக்கண் விழித்து - அறிவாகியநேத்திரமலர்ந்து, அறியும்பொருள் - தானேதானு யறியும பரவஸ்துவாம்—எ-று. ஏ-அசை.

அறியப்படுவது பிரதிபிம்போபாதியும் அறியப்படாதது அவிச்சின்னோபாதியு மாதலினானும், இவ்விரண் டுபாதியுந் தோற்றிமறைவதற்காதாரமாயும் அவற்றையங்கங்கேயசதுவா நின்றறிந்தும் அவை யாகாததாயும் விளங்குவது சைதன்னிய மாகிய வறிவாதலினானும் இவையாவும் நின்பாணிகழப்படுதலி னவ்வறிவே நீ யாமென்றற் கையமின்றாதலினானு மிங்ஙனங் கூறப்பட்டது.

(இ-ள்.) அத்துவித வஸ்துவே தானெனத் தரிசிப்பித்த தாம்.

அ-கை:—இதுபரியந்தம் அவத்தாத்திரயங்களான வறி வறியாமைகளை நியதிகளைந்து அவற்றிற் கதிட்டானமான துரிய வியாபகத்தையே வஸ்துவென வாசிரியருபதேசித்த படி வேதப்பிரமாணமு நிரூபிக்கத் தொடங்கல்.

கவி:—வேதப்பொரு டானிது வேறுசொலும்
வினையாவையு மன்றொரு வேறுமிலாப்
போதப்பொரு ளந்த மறைக்கணியாம்
புனிதப்பொரு டத்தோ மசிப்பொருளே.

(இ-ள்) வேதப்பொருடானிது - இதுவே வேதநிச்சய மாம், வேறுசொலும் - இதற்குவேறாகச்சொல்லப்பட்ட, வினை யாவையுமன்று - கன்மத்துக்கீடாக வந்த சகல மதநிச்சயங் களுமல்ல, ஒருவேறுமிலா - கிஞ்சித்துந் தனக்கன்னியமென் பதில்லாத, போதப்பொருள் - ஞானவஸ்துவானது, அந்த மறைக்கணியாம் - அழகிய வேதத்தின் சிரோரத்தினமாக விளங்கும், புனிதப்பொருள் - அந்தப்பரிசுத்தமான வஸ்து, தத்தோமசிப் பொருள் - சாமவேதத்தின் தத்துவமசி யென் னும் மகாவாக்கியத்தின் பொருளாம்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) அநாதியான சாமவேத மகாவாக்கியத்தைத் தனதுபதேசத்திற்குச் சகாயமாகநிரூபித்ததாம். (சுO)

அ-கை:—மகாவாக்கியத்தின் பதப்பொருள் மூன்றையும் நிரூபித்தல்.

வேறு.

கலி:—நிமலமாம்பர மதுவெ னும்பொரு
ணீயெனும்பொருள் சீவனே
யமலமான விரண்டி னயிக்கிய
மசிபதப்பொரு ளாவதே.

(இ-ள்.) அதுவெனும்பொருள் - முற்கூறிய மகாவாக்கியத்தின் முதற்பதமான தத்தென்பதன்பொருளானது, நிமலமாம்பரம் - நின்மலமான பிரமமும், நீயெனும்பொருள் - இரண்டாமபதமான துவமென்பதன்பொருள், சீவனே - சீவனும், அமலமான - களங்கமற்ற, இரண்டினயிக்கியம் - பிரமகூடத்தவயிக்கியமே, அசிபதப்பொருளாவது - மூன்றாம்பதமான அசிபதத்தி னருத்தமாம்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) தத்துவமசியென்னும் மகாவாக்கியத்தின் றற்சாந துவம்பத மசிபதமென்னு மாரியபதத்தை யது நீ யாறெனத் தமிழ்ப்பதயாக்கிப் பிரமகூடத்த வயிக்கியமென்பது அதன் முக்கியப்பொருளெனப் புகுத்துக்கூறினதாம். (சுக)

அ-கை:—கூடத்த பிரமமென்னு மிரண்டுமொன்றுயவாறெங்ஙனமென வினுதல்.

கவி:—அருமை யாகிய பிரம முன்னிலே
யாகு மாருயிர் பின்னிலே
யிருமை யான விரண்டி னயிக்க
மெய்து மாறெவ னென்னவே.

(இ-ள்.) அருமையாகிய - அரிதான, பிரமம் - பிரமமானது, முன்னிலையாகும் - முதலிலுள்ளதாம், ஆருயிர் - நிறைந்த கூடத்தன், பின்னிலை - பின்னுள்ளதாம், இருமையான - துவிதமான, இரண்டின் - இவ்விரண்டினது, அயிக்கம் - அயிக்கியமானது, எய்துமாறு - அடையும்வகை, எவனென்ன - எவ்வண்ணமெனக் கேட்க—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) இரண்டிலேக்கியமென்றது; பிரமம் கூடத்தனிலா? கூடத்தன் பிரமத்திலா? இங்ஙனமிரண்டானது எங்ஙனமொன்றுபடும்? அங்ஙனமொன்றுபடினுங்கலவாதோ? கலவாவிடி னொருபோது பிரிந்துவருமே? அங்ஙனம் பிரியின யிக்கியமாயிற்றென்பது கூடாதே? ஆதலாலதனுண்மைதெரிவிக்கவேண்டுமென வினாவினதாம். (௬௨).

அ-கை:—சீவேசுரபேத முபாதியாலெனவு மவ்வுபாதிகளில் சீவனுக் கினையதெனவுங் கூறல்.

கலி:—உபாதி யால்வரு பேத மேயிவர்
பேத மொன்றுறு முயிரினின்
கபாதி யாமுடல் போலி றைக்குள
கார ணாதிகள் காயமே.

(இ-ள்.) உபாதியால் - காரணகாரியோபாதியினால், வரு பேதமே - வாராநின்றபேதமே, இவர்பேதம் - இச்சீவேசுரபேதமாம், ஒன்றுறுமுயிரினின் - இப்பேதமடைந்த சீவனுடைய, கபாதியாமுடல்போல் - கபவடிவமான தூலமுதலிய வேழைப்போல, இறைக்குள - ஈசுரனுக்குள்ள, காரணாதிகள் காயம் - சர்வகாரணன் முதலிய வேழும் மூன்றுதேகமாம்—எ-று.

சீவனுக்கேழாவன—தூலம்-க, இந்திரியம்-க, கரணம்-௪, பிராணன்-க ஆகிய வேழும் மூன்று சரீரமாம். இப் பிரதிபிம்

பம் மாயையிலும் அவித்தையிலு மெனக்கொள்க. கபமென் றதைத் தூலமென்றது காரணவாகு பெயர்.

(இ-ம்.) சீவ வுபாதியை வகுத்துக் கூறி ஈசுர வுபாதியைத் தொகுத்துக் கூறியதாம் (சுரு)

அ-கை:—ஈசுரனுபாதி யேழையு நிரூபித்தல்.

கலி.—ஈசன் முற்றறி வான்வியாபி
யெவைக்கு மேது வியமபுமா
காச கன்னிரு பாதி பாவனை
கார ணாதிக ளாவவே.

(இ-ள்.) ஈசன் - சர்வேசனெனவும், முற்றறிவான் - சர்வஞ்ஞனெனவும், வியாபி - சர்வாந்தரியாமியெனவும், எவைக்குமேது - சர்வகாரணனெனவும், இயம்பும் - சொல்லப்பட்ட, மாகாசகன் - சர்வநிதியெனவும், நிருபாதி - சர்வசங்காரனெனவும், பாவனை - சர்வ சிருட்டியெனவுங் கூறிய வேழும், காரணாதிகளாவது - காரணசரீர முதலிய மூன்று சரீரங்களாம்—எ-று. ஏ-அசை.

யாவற்றிற்கு மேலானவன் ஈசனெனவும், யாவையு மறிபவன் முற்றறிவானெனவும், எவற்றினும் நிறைந்திருப்பவன வியாபியெனவும், எவற்றிற்குங் காரணமானவன் எவைக்குமேதுவெனவும், யாவையு மிரக்ஷிப்பவன் மாகாசகனெனவும், யாவையு மழிப்பவ னிருபாதியெனவும், யாவையுஞ் சிருட்டிப்பவன் பாவனையெனவுங் கொள்ளுதல் லவசரம்பற்றியென்க.

(இ-ம்.) ஈசுரனுபாதியை வகுத்துக் கூறினதாம். (சுச)

அ-கை:—உபாதிகணீங்கும்படி யவற்றின் றன்மைகளை நிரூபித்தல்.

கவி:—நீதி யாலிரு பாதி நீங்கிட
நீயெ னச்சொல் பதத்தினு
மாதி யாகிய தற்ப தத்து
மசுத்த சுத்த முரைத்துமே.

(ஈ-ள்.) நீதியால் - வேதங்கள்கூறிய வொழுங்கின்படி, இருபாதிநீங்கிட - காரணகாரியவுபாதிக ணீங்கும்பொருட்டு, நீயெனச்சொல் பதத்தினும் - நீயெனப்படுந் துவம்பதத்திலும், ஆதியாகிய தற்பதத்தும் - முதற்கண்ணுள்ள தற்பதத்திலுமுள்ள, அசுத்தம் - அசுத்தோபாதியும், சுத்தம் - சுத்தோபாதியும், உரைத்தும் - சொல்லுவாம்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) ஜீவேசுர கற்பனை நீங்க வவற்றின் சுத்தா சுத்தங்களைக் கூறததொடங்கினு ரென்பதாம். (சுரு)

அ-கை:—துவம்பதத்தின் சுத்தாசுத்த நிரூபித்தல்.

கவி:—ஆக முன்றிக ழேழு நானென
றொம்ப தத்தி னசுத்தமே
சோக மின்றிய சான்று நானென
ரொம்ப தப்பொருள சுத்தமே.

(இ-ள்.) ஆகமுன்றிகழ்-தேகமுதலாக விளங்கிய, ஏழுநானெனல் - ஏழையு நானெனக் கொள்ளுதல், தொம்பதத்தினசுத்தமே-துவம்பதார்த்தத்திற்கசுத்தோபாதியாம், சோகமின்றிய-துக்கமில்லாத, சான்றுநானெனல்-சாட்சியே நானென்பது, தொம்பதப்பொருள் - துவம்பதார்த்தத்திற்கு, சுத்தம்-சுத்தோபாதியாம்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) அசுத்த சுத்தமான சீவகூடத்த விலக்கணந் தெரிவித்ததாம். (௬௫)

அ-கை:—தற்பதத்தின் சுத்தாசுத்த நிரூபித்தல்.

கவி:—அகில காரண மாதி நானென
றற்ப தத்தி னசுத்தமே
சகல காரண சான்று நானென
றற்ப தப்பொருள் சுத்தமே.

(இ-ள்.) அகிலகாரணமாதி - சர்வகாரணன் முதலியவெ ழும், நானெனல் - நானென்பது, தற்பதத்தி னசுத்தமே - தற்பதார்த்தத்திற்கசுத்தோபாதியாம், சகலகாரணம் - சர்வகாரணத்திவேழிற்கும், சான்று நானெனல் - சாட்சியே நானென்பது, தற்பத - பொருள் சுத்தமே - தற்பதார்த்தத்திற்குச சுத்தோபாதியாம்—எ-று.

(இ-ம்.) அசுத்த சுத்தமான வீசுரபிரகத்தி னிலக்கணந் தெரிவித்ததாம். (௬௬)

அ-கை:—அசிபதார்த்த தரிசனஞ் செய்வித்தல்.

கவி:—செறிந்த காரண காரி யங்கள்
சிதைந்து மேலுறு சித்தரா
யறிந்த வாதனை தானு மற்றதவ்
வசிப தப்பொரு ளாவதே.

(இ-ள்.) செறிந்த - நெருங்கிய, காரண காரியங்கள் - ஈசனது காரணோபாதியுஞ் சீவனது காரியோபாதியும், சிதைந்து - நசித்து, மேலுறு சித்தராய் - மேலுள்ள பிரமகூடத்தராய், அறிந்த வாதனை தானும் - இவ்விரண்டாகத் தெரிந்தவாசனை

யும், அற்றது - லயித்தது. அசிபதப்பொருளாவது - அசிபதத்தி னருத்தமாம்—எ-று எ-அசை.

அசிபதத்திற்குக் கூடத்த பிரமமென்ப தசுத்தமும், அதுவேயிது இதுவேயது வென்னு மயிக்கியத்தி லவ்விருவாசனை நீக்கமே சுத்தமுமாமென்க.

(இ-ம்.) சுருதிப் பிரமாணங் காரணமாகத் தானேனும் வஸ்து நிச்சயத்தைத் தரிசிப்பித்ததாம். (கூஅ)

அ-கை—முற்கூறிய சுத்தாசுத்தங்களை முக்கியவிலக்கியமென நிரூபித்தல்.

கவி:—அசுத்த மாகிய இருபதத்தினு
முக்கி யப்பொருளாவதே
விசுத்த மான திலக்கி யப்பொரு
ளென்று சொல்லுவர் விமலரே.

(இ-ள்) அசுத்தமாகியது - அசுத்தமெனப்படுவது, இருபதத்தினும் - இரண்டு பதங்களினும், முக்கியப்பொருளாவதே - முக்கியார்த்தமாம், விசுத்தமானது - பரிசுத்தமெனப்படுவது, இலக்கியப்பொருள் - இலக்கியார்த்தமாம், என்று சொல்லுவர் விமலர் - என்று சத்துக்கள் சொல்லுவார்கள்—எ-று. எ-அசை.

(இ-ம்.) அசுத்தம் முக்கியமெனவும் சுத்தம் இலக்கியமெனவுங் கூறியதாம். (கூகூ)

அ-கை:—அம்முக்கிய விலக்கிய மிவையென நிரூபித்தல்.

கவி:—முரண்ட சீவ பரங்க டம்முடன்
முக்கி யப்பொரு ளாவதே
இரண்டில் வேறற சிற்சொ ரூப
மிலக்கி யப்பொரு ளாவதே.

(இ-ள்.) முரண்ட - வேறுபாடான, சீவபரங்கடம்-சீவேசுரர்களுடைய, உடல் - சமட்டி வியட்டி தேகங்கள், முக்கியப்பொருளாவது - முக்கியார்த்தமாம், இரண்டில் - இவ்விரண்டுடலின் கண்ணும், வேறற - வேற்றுமையின்றி விளங்கும், சிற்சொரூபம் - கூடத்தப்பிரமம், இலக்கியப் பொருளாவது - இலக்கியார்த்தமாம்—எ-று. ஏ-அசை.

(இ-ம்.) சீவேசர்க ளவத்தாத்திரய சம்பந்தம் முக்கியமெனவும் அச்சம்பந்தம் நீங்கினவிட மிலக்கியமெனவுங் கூறினவாறாம்.

ஆ-கை:—இலக்கணாவாக்கியப்படி யுபாதிகளை நீக்கினவிடத்துள்ள வஸ்து வெளிப்படுமென நிரூபித்தல்.

கவி:—ஊக்கி யப்பர சீவர் தங்க
ளுடம்பி ரண்டு மிலக்கணா
வாக்கி யப்படி நீக்கி னாலொரு
வஸ்து வேபர வஸ்துவே.

(இ-ள்.) ஊக்கி-உற்சாகங்கொண்டு, அப்பரசீவர் தங்கள்-அந்தப்பரஜீவர்களின், உடம்பிரண்டும் - சமட்டி வியட்டியான தேகங்களிரண்டையும், இலக்கணா வாக்கியப்படி - லட்சணா வாக்கியப்பிரகாரம், நீக்கினால் - பிரித்துவிட்டால், ஒரு வஸ்துவே-ஒப்பற்ற கூடத்த பிரமமே, பரவஸ்து - மேலானவயிக்கிய வஸ்துவாம்—எ-று. ஏ-அசை.

அடையாறு, சென்னை-20.


(இ-ம்.) விலட்சணமான கூடஸ்த பிரமமே சலட்சணமான வத்துவிதவஸ்து வென்பதாம். (எக)

அ-கை:—அவ்விலக்கணை மூன்றென நிரூபித்தல்.

கவி:—ஓரில் விட்டதும் விட்டி டாதது
முபய மும்மென வுணர்வுளோர்
தேரி லக்கணை திரிவி தத்தி
லிசைப்பர் மற்ற தியம்புவாம்.

(இ-ள்.) ஓரில் - விசாரிக்கின், விட்டதும் - விட்டலக்கணையெனவும், விட்டிடாததும் - விடாதலக்கணையெனவும், உபயமும்மென - விட்டுவிடாத லக்கணையெனவும், உணர்வுளோர் - அறிவுள்ளவர்கள், தேரிலக்கணை - தெரிந்தறியுமிலக்கணைகளை, திரிவிதத்தி லிசைப்பர் - மூன்றுவிதமாகச் சொல்லுவார்கள், மற்ற தியம்புவாம - அதனைச் சொல்லுவாம்— எ-று.

(இ-ம்.) முற்கூறிய விலக்கணுவாகிய மூன்றுவிதமெனவும் அவற்றினுமை மினையவெனவும்கூறினரென்பதாம்.(எஉ)

அ-கை:— விட்டலக்கணையின் சொரூபநிரூபித்தல்.

கவி:—மஞ்சு கூப்பிட லென்றல் போலவும்
வடபகீரதி யுள்ளதே
விஞ்சு கோடம தென்றல் போலவும்
விட்ட லக்கணை யாவதே.

(இ-ள்.) மஞ்சு - மஞ்சமானது, கூப்பிடலென்றல்போலவும்-சத்திக்கின்றதென்று சொல்லுதல்போலவும், வடபகீரதி-வடகங்கையினிடத்து, உள்ளதே விஞ்சுகோடம தென்றல்

போலவும் - பெரிய விடைச்சேரி யிருக்கின்றதென்று சொல்லுவதுபோலவுமிருக்கும், விட்டலக்கணையவது - விட்டலக்கணையெனப்படுவது—எ-று. ஏ-அசை.

மஞ்சுகூப்பிடாமென் றதைவிட் டதற்குள் ஒரு புருடனிருந்து கூப்பிடுகின்றானென்று லட்சியிப்பதுபோலவும், கங்கைக்கணிடைச்சேரி யிருக்குமாமென் றதைவிட் டதன் கரையிலிடைச்சேரி யிருக்கின்றதென்று லட்சியிப்பதுபோலவும், சடமான தேகாதிகளறியாமென் றவற்றைவிட்டதன் கண்ணுள்ள சீவியான கூடத்தையறிகின்றதென்று லட்சியிப்பதனால் விட்டலக்கணையெனப் பெயராயிற்றெனக் கொள்க.

(இ-ம்.) அவித்தியாமயமானவனுத்மாவைவிட்டு வித்தியாமயமான வாத்மாவை லட்சியிக்கவேண்டு மென்பதாம். (௪௩)

அ-கை:—விடாதலக்கணையின் சொரூப நிரூபித்தல்.

கவி:—சிவலை நின்றது வெள்ளை போயினது
தென்று செப்புதல் போலவே
கவலை யின்றி விடாத லக்கணை
யென்று நீகொள் கருத்திலே.

(இ-ள்.) சிவலைநின்றது - சிவப்புநிற்கின்றது, வெள்ளை போயினதென்று - வெள்ளை போகின்றதென்று, செப்புதல் போல - ஒருவன் சொல்லுமாறுபோல, கவலையின்றி - துன்பமின்றி, விடாதலக்கணை யென்று - விடாதலக்கணையாமென்று, நீ கொள்கருத்தில் - நீ கருத்திற்கொள்வாய்—எ - று. ஏ - அசை.

சேமாவையும் வெள்ளாவையுங் கண்டாயோ வென்பவற்குச் சிவலை நிற்கின்றது வெள்ளை போகின்றதென்ற வசனத்தில் செம்மை வெண்மை யென்னுங் குணங்கள் அசேதனமாதலினாலும், தாமொரு முதலன்றாகையானும், போக்கு வரவு முதலிய செயல்கள் பொருந்திய தன்றனக்கண் டவை காரணமாகத் தமக் கபேதமாயு முதலாயு முள்ள வடிவமாகிய குணியை யங்ஙனே கேட்டோர்க்குக் குறிப்பித்து நின்றாற்போலச் சச்சிதானந்த மென்னுங் குணங்கள் அசேதனமாதலினாலும், தாமொரு முதலன்றாகையானும் பிரவிர்த்தி நிவிர்த்தி முதலிய சத்திக டமக் குரியதன்றனக்கண் டவை காரணமாகத்தமக் கபேதமாயு முதலாயுநின் றெங்கணுஞ் சதோதயமாக விளங்குஞ் சுயஞ்சைதன்னிய சொரூபமாகிய குணியை யங்ஙனே நிவாதார்க்குக் குறிப்பித்து நிற்றலி னிவ்வுவமை கூறலாயிற்று.

(இ-ம்.) வஸ்துவுக்குரிய குணங் காரணமாக வவ் வஸ்துவை லட்சியிக்கவேண்டு மென்பதாம். (௭௪)

அ-கை:—விட்டுவிடாத லிலக்கணையின் சொரூபநிரூபித்தல்.

கவி:—மேவும் விட்டு விடாத லக்கணை
மெய்ம்மை யாதெனி னந்தவித்
தேவ தத்த னெனும்பொ ருட்படி
சிந்தை செய்திடு தீரவே.

(இ-ள்.) மேவும் - முன்சொல்லிய, விட்டுவிடாத லக்கணை - விட்டுவிடாத லக்கணையின், மெய்ம்மை யாதெனின் - உண்மை யாதென்றால், அந்தத் தேவதத்தன் - அந்தத் தேவ

தத்தனே, இத்தேவதத்தன்-இந்தத் தேவதத்தன், என்னும் பொருட்படி - என்னு மருத்தத்தின்படி, சிந்தைசெய்திடுதீர வே - தீர்வையாகச் சிந்திப்பாய்—எ-று. ஏ-அசை.

அநிர்த சட துக்கமான கற்பனு சொரூபத்தை விட்டுச் சச்சிதானந்த யதார்த்த சொரூபமே யாவுமென்றொன்றையும் விடாமற் சிதானந்தமாத்திரமா யிருத்தலின் விட்டுவிடாத லக்கணையெனப் பெயராயிற்று.

(இ-ம்.) பிரமமே கூடத்தன் கூடத்தனே பிரமமென்னு நிடத்தி லிவ்விரு நாமங்களு நீங்காம னீங்கித் தனியாய் நின் றதே யத்துவித சொருப மென்பதாம். (எரு)

அ-கை:—விட்டுவிடாத விலக்கணைப்படி தன்னைத்தா னுகக் காண்பாயென நிரூபித்தல்.

கலி:—விட்ட லக்கணை தனையும் விட்டு
விடாதலக்கணை தனையுநீ
விட்டு விட்டு விடாத லக்கணை
யால்வி ளங்கு விளங்கவே.

(இ-ள்.) விட்டலக்கணை தனையும் - விட்டலக்கணையா னிச்சயித்த நீயென்னுங் கூடத்தனையும், விட்டு - நீங்கி, விடா தலக்கணை தனையும் - விடாத லக்கணையா னிச்சயித்த வது வென்னும் பிரமத்தையும், விட்டு - நீங்கி, விட்டுவிடாத லக் கணையால் - யாவற்றையும் விட்டுவிடாம லேகமாய் விளங்கிய வானுயென்னும் பாவஸ்துவால், விளங்கு விளங்க - யாவுந் தா னாய் விளங்கும்படி விளங்குவாய்—எ-று. ஏ-அசை.

எனவே யாவையு நீக்கித் தான்மாத்திர மிருப்பது விட்ட லக்கணை யெனவும், இங்ஙனமிருக்கின்ற தானே யாவுமாயிருப்பது விடாதலக்கணை யெனவும், சர்வமுமல்ல சர்வமுமா மென்ற வசனத்திற் றானுந் தானல்ல வென்ற விரண்டு பதத்தினு முள்ள தாமல்லவெனப் படுபொதியாதலானுந் தானென்பதே முழுதினு மிருக்கையானும் விட்டுவிடாத லக்கணை யெனவும் பொருள்படுமாறு காண்க.

(இ-ள்.) இதுவே சாமவேதத்தின் முடியின் விளங்கிய மகாவாக்கியத்தின் பத பதார்த்தங்களினிச்சயம். இந்நிச்சயப்படி தானாய் விளங்குவதே தன்சொரூப மென்பதாம். (௭௬)

அ-கை:—முன்னுபதேசித்த குருவாக்கியப்படி சுருதி நிச்சயத்தையுந் தெரிந்து அதன்படியே யனுபவங் காணத் தொடங்கிய சீடன் வினவல்.

கலி:—போது மேவிய தேசம் விட்டொரு
புருட னைக்கொளு மாறுபோ
லோது மீருடல் கண்டு விட்டத
னுண்மை காண வுரைத்திடே.

(இ-ள்.) போது - காலமும், மேவிய - இருந்த, தேசம் - தேசமும், விட்டு - (வேடமும்) விட்டு, ஒருபுருடனை - ஒரே புருடனை, கொளுமாறுபோல் - கொள்ளுகின்ற விதத்தைப் போல், ஓதுமீருடல் - முன்சொல்லிய விரண்டு தனுவையும், கண்டு விட்ட - தரிசித்து நீக்கிய, தன்னுண்மை காண - தானென்னுந் தத்துவத்தைத் தரிசிக்க, உரைத்திடு - அருள்செய்யவேண்டுமெனச் சீடன் [illegible]சை.

MAHAMAHOPADHYAYA
Dr. U. V. SWAMINATHA IYER LIBRARY

ஈருடலென்றது சீவனுக்குக் காரியோபாதியேழும் ஈசனுக்குக் காரணோபாதியேழுமெனக் கொள்க.

எனவே, ஒருபுருடன் பொருட்செல்வத்தை விரும்புங் காலத்திற்பூவிற் கரசனாகவு மருட்செல்வத்தை விரும்புங்காலவ்வனத்திற் றுறவியாகவு மிருந்தபோதினு மவ்வேடங்கட்கரசன் றுறவியென்னும் நாமரூபமே யன்றி யப்புருடனைக் காலத்தினு மொருவனேயாவன். எங்ஙனமெனின், ஆத்மகோடிகளைச் சங்கரிக்கை பண்ணுநிமித்த மவர்களிற் றுஷ்டநிக்கிரக சிட்டபரிபாலனஞ் செய்யுந் தொழிலுக் குரிய வரசவேடங்கொண்ட புருடனை பின்பு தன்னைச் சங்காரிக்கை பண்ணுநிமித்தந் தனதிந்திரியங்களிற் குரூரமான காமக்குரோதாதிகளைக் களையு நிக்கிரகமும் விவேகமாதியவைகளைக் காக்கும் பரிபாலனமுஞ் செய்தற்குரிய தவவேடங் கொண்டானெனக் கண்டவக்கணமே யவனே யிவ னிவனே யவனென்னு மேகத்துவம் விளங்கும்; அது விளங்கக் காலம் வேடமிடமென்னும் விகற்பந் தோன்றாதவனாகவிளங்கும். அதுபோலச் சதோதயமாக விளங்கிய வோர் வஸ்துவே தன்னுல்லாசத்தினாற் றனதம்சமாகத் தோன்றிய வாத்மகோடிகளைச் சவரட்சணை செய்யுநிமித்த மவர்க ளுள்ளத்தின்க ணிருந்தவர்கடுர்க்குணத்தைமாற்றிச் சற்குணங்களை வருவித் ததனாற் றானக விளங்கச்செய்யுஞ் சிருட்டியாதி தொழிலுக்குரிய வீசுரவேடங் கொண்டபிரமமாகவும், இவ்வாத்மகோடிகளிடத்துத் தானிருப்பதைத் தானாகவே காணு நிமித்தந் தானே தனித்தனியே தன்னைச் சிந்திக்கும் விசாரணைசெய்யுந் தொழிலையுடைய சீவவேடங்கொண்ட கூடத்தனாகவும், பிரமமே கூடத்தன் கூடத்தனே பிரமமெனக் காணும்போது அவன் இவ

னென்னுந் துவித நீங்கிச் சுயஞ்சித்தாகவும் விளங்குமாதலி னவ் வெதார்த்தத்தை யுள்ளபடி யறிவதே விட்டுவிடாத லக்கணையின் பயனென்பதாயிற்று.

(இ-ம்.) ஆசிரியர் பிரமோபதேசத்திறைலுஞ் சருதிவிசாரணையினாலு மனுக்கிரகஞ்செய்த சுத்தாசுத்தமாயுள்ள சீவேசுரகூடத்த பிரமமாகிய மவை யல்லாததாகியும் விளங்குந் தானெனப்படும் பரவஸ்துவை யனுபவத்திற் காட்டும்படி வினவினனென்பதாம். (எஎ)

அ-ஊக:—வாக்கியார்த்த மனுபவமாகத் தரிசிக்கும்படி நிரூபித்தல்.

வேறு.

கலி:—பிரியாவுயிர் காரியமா முடலும்
பிரமத்துறு காரணமா முடலுங்
கரியாகிய வாதனையுங் கழியக்
காட்டும்படி கண்டுகொள் கண்ணுறவே.

(இ-ள்.) பிரியா வுயிர் - சீவனைவிட்டு நீங்காத, காரியமா முடலும் - காரிய வுபாதியாகிய மூன்று சரீரமும், பிரமத்துறு - பரனை விடாமற் பொருந்திய, காரணமா முடலும் - காரணவுபாதியாகிய மூன்றுசரீரமும், கரியாகிய-இவற்றிற்குச் சாட்சியாகிய கூடத்த பிரமமென்னும், வாதனையுங் கழிய - துவித வாசனதோஷமு நீங்க, காட்டும்படி - நாங் காண்பிக்கும் பிரகாரம், கண்டுகொள் கண்ணுற - நீ பிரத்தியட்சமாகத் தெரிந்துகொள்—எ-று.

(இ-ம்.) மகாவாக்கியத்தி லுள்ள மூன்று பதார்த்தங்களின் சுத்தாசுத்தங்களை நீக்க வவற்றினுண்மையை யனுபவமாகத் தரிசிப்பிக்கத் தொடங்கினதாம். (எஅ)

அ-கை.—இவ்வாறன்றிச் சகல கேவலங்களாற் காணப் படாதெனல்.

கலி·—கரணத்திர ணிற்பினு மப்பொருளைக்
காணக்கிடை யாதவை கையறவே
மரணப்படி னும்மது கண்டுகொளும்
வழியில்லை யெனும்படி நீமதியே.

(இ-ள்) கரணத்திரள் - கரணசமூகங்கள், நிற்பினும் - இருந்தாலும், அப்பொருளை - அக்குருதுரியத்தை, காணக்கிடையாது - தரிசிக்கக்கூடாது. அவை - அத்தத்துவங்கள்,— கையறவே மரணப்படினும் - முழுது நசிக்கினும், அது - அக்குருதுரியத்தை, கண்டுகொளும் - தெரிந்து கொள்ளும், வழியில்லை யெனும்படி-மார்க்கமில்லை யென்னும் விதத்தை, நீமதி - நீ தெரிந்துகொள்வாய்—எ-று.

(இ-ம்.) தன்னை யறிவறியாமைகளா லறியக் கூடாதென்பதாம். (௭௧)

அ-கை:—அச்சகல கேவலங்களே யவத்தாத்திரயமெனல்.

கலி:—எந்தக்கர ணங்களு மேவனனு
விதன்வாதனை யால்விட யங்களொடே
யந்தக்கர ணங்கள் பொருந்தல் கனு
வவைமாய்தல் சுழுத்தி யவத்தையதே.

(இ-ள்.) எந்தக்கரணங்களும்-அகக்கரண புறக்கரணங்களனைத்தும், மேவனனு-மேவியது சாக்கிராவத்தையாம், இதன் வாதனையால்-இச்சாக்கிர வாதனையோடும், விடயங்களொடே - விஷயங்களுடன், அந்தக்கரணங்கள் - அகக்கரணங்கள், பொ

ருநதல் கனு - சேர்வது சொப்பனுவத்தையாம், அவைமாய் தல் - அவ்விருகரணங்களு மொடுங்கி நிற்றல், சுழுத்தியவத் தையது - சுழுத்தியவத்தையாம்—எ-று.

(இ-ம்.) முன் னறி வறியாமைகளா லறியப்படா வென் பதை யவைக வவத்தாத்திரயமென வற்புறுத்தி யவற்றினிடமாய விளங்குந் துரிய வனுபவத்தைக் குறிப்பாற் றெரிசிப்பித்த தாம்.

அ-கை.—மேன் மூன்று கவியானுங் குறிப்பித்த சுவா னுபவப் பிரத்தியக்ஷத்தின தருமை யினையதென விளக்கல்.

வேறு.

கவி:—வினவிற் பரத்தையறி வுறுதற் கவத்தைபுலன் வினைமாறியே
நனவிற் சுழுத்திநிலை வரினப பொருட்டிகழு நலனுகவே.

(இ-ள்.) வினவில் - சொல்லுமிடத்து, பரத்தை யறிவுறுதற்கு-பரவஸ்துவை யறிதற்கு, அவத்தை - மூன்றவத்தையும், புலன் - இவற்றையறியு மூன்றபிமானிகளும், வினை - இவைகளிருந்தறிதற்குத்தானமாகிய மூன்றுதேகமும், மாறி - நீங்கி, நனவிற் சுழுத்திநிலை வரின்-சாக்கிரசுழுத்தியின் றன்மைவந்தால், அப்பொருள் - அப்பரவஸ்து, திகழுநலனுகவே- ஆனந்தானுபவமாய் விளக்கும்—எ-று.

(இ-ம்.) யாவுந் தோன்றியுந் தோன்றாதிருக்கு மவசரத் தினுள்ள துரியமே துரியாதீதமாதலின் அது தனது சொரூப மென விளக்கினுரென்பதாம். (அக)

அ-கை.—அங்ஙன மருமைப்பொருளாயுள்ள தினையதெனக் காட்டுவான்வேண்டி முப்பதத்தினுள் தத்துவம் பதத் திலக்கியார்த்த மிங்ஙிலையதென விளக்கல்.

கவி:—திவிதத் தவத்தைகளை யறிவுற்ற வத்துரிய
நிலைசிவனே
யிவிதத்தி லப்புருட னனவுற்ற வத்துரிய
நிலையீசனே.

(இ-ள்.) திவிதத்தவத்தைகளை - அவத்தாத்திரயங்களை, அறிவுற்ற - சாட்சியாய் நின்றறிந்த, அத்துரியநிலை - அத்தன்மையான துரியமே, சிவன் - கூடத்தனும். இவிதத்தில் - இவ்விதமாக, அப்புருடன் - அக்கூடத்தன், நனவுற்ற - விராட்டாதிய மூன்றவத்தைகளையு மறிந்து சேடித்துநின்ற, அத்துரியநிலை - அத்தன்மையான துரியமே, ஈசன்-பிரமமாம்— எ-று.

(இ-ம்.) சமட்டி வியட்டி யவத்தாத்திரயங்களை யறிந்து அதற்கு மேலாய்நின்ற சிவபர துரியமே கூடத்த பிரமமெனக் கூறியதாம். (௮௨)

அ-கை:—ஏனைய வசிபதத்தி னிலக்கியார்த்த மிந்நிலைய தென விளக்கல்.

கவி:—அகிலக் கரிப்பரம துரியப் பொருட்டுரிய
மதுவாகையே
புகலுற்ற தத்தொமசி யெனுமுப் பதத்தின்முடி
பொருளாவதே.

(இ-ள்.) அகிலம் - சமஸ்தத்திற்கும், கரி - சாட்சியாக விளங்குகின்ற, பரமதுரியப்பொருள் - ஈசுரதுரியமான பிரமமே, துரியம் - சிவதுரியமாம், அது - அச்சிவதுரியமே, ஆகையே - பரதுரியமாக வயிக்கமாதலே, புகலுற்ற - வேதமுடிவில் கூறிய, தத்தொமசியெனும் அது நீயானா யென்கின்ற,

மூப்பதத்தின் - மூன்று பதத்தின், முடிபொருளாவது - முடிந்த பொருளாவதாம்—எ-று.

(இ-ம்.) மகாவாக்கியார்த்தங்களின் முடிந்த பிரமவஸ்துவே தானென்பதற்குப் பொருளாமென வனுபவத்திற் பிரத்தியட்சமாக விளக்கினு ரென்பதாம். (அரு)

அ-கை:—அவ்விளக்கத்தா லுள்ளபடி விளங்கிய மாணுக்கன் றனது சுவானுபவத்திற்கு வியந் தாசிரியரைப் பணிதல்.

கவி:—நிமலப் பொருட்சுருதி நெறியிற் பெறக்கருணை
நிதிகூறவே
யமலப்பொருட் பெறுத லருமைத் தெனக்கழறி
யடிவீழவே.

(இ-ள்.) நிமலப்பொருள் - நின்மலமான வத்துவித வஸ்துவை, சுருதிநெறியில் - வேதமார்க்கமாய், பெற - அடையும்படி, கருணைநிதிகூற - கருணாநிதியான வாசிரிய ரனுக்கிரகிக்க, அமலப்பொருள் - களங்கரகிதமான தன்னை, பெறுதல் - அடைதல், அருமைத்தெனக் கழறி-அருமை யருமையெனத் துதித்து, அடிவீழ - பாதத்திற் சிரம்படும்படி சாஷ்டாங்கமாகச் சேவிக்க—எ - று.

'அமலப்பொருட் பெறுத லருமைத்தெனக் கழறி யடிவீழவே' என்பதனுல் அது விளங்கிய மாணுக்கனெனப் பொருளமையப் பெற்றும்.

(இ-ப்.) அனுபவ மபரோட்சமானதைக்கண் டதிசயித்ததாம். (அஎ)

அ-கை: — அபரோட்ச ஞானனுபவ மதீதமாகும்பெருட்டறுதித் திருவடி தீட்சை செய்யத் தொடங்குதற்குரிய மங்கலாபிடேகஞ் செய்தல்.

கவி:—தமரக் கலைக்களவு தெரிவுற்ற தற்பொருள
தனையீகுவா
னமரர்க் களப்பரிய பதநற் புனற்கொடுசெய்
தபிடேகமே.

(இ-ள்.) தமரக்கலைக்களவு - நாதரூபமாயுள்ள வேதாகசி யங்களை, தெரிவுற்ற - தெரிந்த, தற்பொருளதனை - தானாகிய பொருளை, ஈகுவான் - மாணுக்கனுக்குக் கொடுப்பான் வேண்டி, அமரர்க்கு - தேவர்களுக்கும், அளப்பரிய-அளவிட்டறிதற் கரிய, பதநற்புனற்கொடு - ஆசிரியர் தனது பாத தீர்த்தத்தைக் கொண்டு, செய்தபிடேகம் - மங்கலஸ்நானஞ் செய்வித்து—எ - று.

உயர்வு சிறப்பும்மை யெஞ்சியது.

(ப-ம்.) அறிதித்திருவடி தீட்சையைத் 'தற்பொருள தனையீகுவா' னெனவும், பாத தீர்த்தத்தினது மகிமைதோன்ற 'அமரர்க் களப்பரிய பதநற் புனற்கொ' டெனவுங் கூறினாரென்க. இவ்வாறன்றித் தமரக்கலைக்கு - நாதரூபமான வேதாகமக் கிரியைகளுக்குள்ள, அளவு தெரிவுற்ற - முடிவு தெரிந்த, எனினு மமையும்.

(இ-ம்.) முத்தியுலகுக் கரசனுகப் பதமுடிசூட்டிப் பட்டாபிஷேகஞ் செய்வான்கருதி யதற்குரிய மங்கலஸ்நானஞ் செய்வித்தாரென்பதாம். (அ௫)

அ-கை:—விபூதிப்பிரசாத மனுக்கிரகித்தல்.

கவி:—பவளத்தின் வைத்தவயிர் தினின்மிச்சி லிட்டி
னிய பரிவோடுமார்
தவளப் பொடிக்கவச மெனவிட் டிடற்பகைக
டலைசாயவே.

(இ-ள்) பவளத்தின் வைத்த - பவளம்போன்ற வதரத்தில் வைத்த, அமிர்தினின் - அமுதில், மிச்சிலிட்டு - சேடமான பிரசாதங் கொடுத்து, இனிய பரிவோடும் - இனிமையான வன்போடும, ஆர்தவளப்பொடி - வெண்மை நிறைந்த விபூதியை, கவசமென - வச்சிரகவசம்போல், உடற்பகைகள் - தேகமுதனுதவரையினுமுள்ள சத்துருக்கள், தலைசாயநசிக்கும்படி, இட்டு - தரித்து—எ-று.

பவளமென்றது - உவமை யாகுபெயர்.

(இ-ம்.) எதிரீடின்றித் தானேதானுக விளங்கும்படியதன் குறியான விபூதியைத் தரித்துப் பிரசாதமு மருளினரென்பதாம். (அசு)

அ-தை:—பாதமென்னு முடியினுற் பட்டாபிஷேகஞ் செய்வித்தல்.

கவி:—உதகத் துடற்பொருளோ டுயிர்கைக்கொ
டுச்சிமிசை யொருபோதொடே
பதகத் தலத்தையிட விருகைத்
தலத்தோடிரு பதமேவவே.

(இ-ள்.) ஒருபோதொடே - ஏககாலத்திற்றுனே, உதகத்து - சலத்தினுல், உடற்பொருளோடுயிர்-மாணுக் கன்றத்தஞ்செய்த வுடல் பொருளாவியை, கைக்கொடு-ஆசிரிய ரேற்றுக்கொண்டு, உச்சிமிசை - அவனது சிரசின்மேல், பதகத்தலத்தையிட - பாதமாகிய கிரீடந்தரிக்க, இருகைத்தலத்தோடு - அவன் றன துபயகரங்களோடும், இருபதமேவ - அவரது உபய பாதங்களையும் நமஸ்கரிக்க—எ-று.

(இ-ம்.) பட்டாபிஷேகமான வறுதித்திருவடி தீட்சை செய்தன ரென்பதாம். (அஎ)

அ-கை:—ஆசிரியர் தாமனுக்கிரகித்த சுத்தசங்கற்ப ரகித சுவானுபவா தீதமான மோட்ச சாம்பிராச்சிய வனுபவத்தை வினவுதல்.

கவி:—ஒழியப் புலக்கணுப நிட.தப்
பொருட்டெரிய வுளஞானமாம்
விழியைக் கொடுத்துமொழி யெனமுப்
பதப்பொருளும் வெளியாகவே.

(இ-ள்.) ஒழியப்புலக்கண் - விடயதிருட்டிநீங்கவு்ர், உப நிடதப் பொருட்டெரிய - வேதமுடிவின்கணுள்ள மகாவாக் கியார்த்தம் பிரசன்னமாகத்தரிசிக்கவும், உளஞானமாம் - சத் தாசாமான்னிய பிரஞ்ஞையென்னும், விழியைக்கொடுத்து - அதீத திருட்டியைக் கொடுத்து, முப்பதப்பொருளும் - தத் துவமசி யென்னுந் திரிபதார்த்தமானது, வெளியாக - யாவ ருக்கும் பிரத்திபட்சமாக, மொழியென - சொல்வாயென்றாசி ரிய ரனுபவங்கேட்க—ஏ-று.

(இ-ம்.) முத்தியுலகிற் கரசுசெலுத்து முறைமை வினு வினதாம். (அஅ)

அ-கை:—ஆசிரிய ரனுக்கிரகித்த மாபின்படி மாணாக்கன் றனதனுபவத்தைச் சொல்லப்புகுவதைக் கூறுவாமெனல்.

கவி:—நனவைத் துவக்கிமுடி துரியத்தை
முற்றவிறை நவினீதியே
மன்வர்க்க மற்றவனு பவமுற்ற
சிற்கனவின் வலியோதுவாம்.

(இ-ள்.) நனவைத்துவக்கி - சாக்கிரமுதல், முடி - மேல், துரியத்தைமுற்ற - துரியமீருக, இறை - ஆசிரியர், நவினீதி

யே - அருளிச்செய்த வொழுங்கின்படி, மனவர்க்க மற்ற - மனோசந்ததி நீங்கிய, அனுபவம் - சுவானுபவத்தால், உற்ற - விளங்கிய, சிற்கனவின் - ஞானசொப்பனத்தின், வலியோது வாம் - வல்லமையைக் கூறுவாம்—எ-று.

கனவென்பது; மனம் யாவத் ரூபமாய்த் தோன்றி மறை தல்போல ஞானமே யாவத்ரூபமாய்த் தோன்றி மறைவது.

(இ-ம்.) விடயானுபவ நீங்கி யாவும் பிரமானுபவமாக வனுபவிக்கு முறைமையைக் கூறத் தொடங்கினதாம். (அக)

அ-கை:—சாத்திகநிசையி லனுபவிக்குஞ் சீவசாக்கிரானு பவங் கூறல்.

வேறு.

கவி:—புரண மாகவே புறம்புள புலன்களு மந்தக்
கரண மியாவையும் வழங்கிட நனவெனக் கண்டேன்.

(இ-ள்) புறம்புள - புறம்பினுள்ள, புலன்களும் - புலன் களாகிய புறக்கரணங்களும், அந்தக்கரணம் - மனமுதலிய வகக்கரணங்களுமாகிய, யாவையும் - அனைத்தும், புரணமாக வே - பரிபூரணனந்தமாக, வழங்கிடம் - சஞ்சரிக்குமிடத்தை, னவெனக் கண்டேன் - வியட்டிசீவனுக்குச் சுத்த சாக்கிர மெனத் தரிசித்தேன்—எ-று.

(இ-ம்.) பிரம சந்நிதானத்திற் பிரகிருதிமுதல் விடய பரியந்தமாயுள்ள கற்பனைகளசசொரூபாம்சமான வானந்தமாக விளங்கிக்கொண்டிருப்பதுகூடத்தசாக்கிரமென்பதாம். (க0)

அ-கை:—சீவ சொப்பனானுபவங் கூறல்.

கவி:—புரண மாகவே புறம்புள புலன்கெட வந்தக்
கரண மியாவையும் வழங்கிடங் கனவெனக் கண்டேன்.

(இ-ள்.) புறம்புள - புறத்திலுள்ள, புலன்கெட - இந்திரியங்களொடுங்காநிற்க, அந்தக்கரண மியாவையும் - அகக்கரணங்களனைத்தும், புரணமாகவே - பரிபூரண போதமாகவே, வழங்கிடம் - சஞ்சரிக்குமிடம், கனவெனக் கண்டேன் - வியட்டி சீவனுக்குச் சுத்தசொப்பனமெனத் தரிசித்தேன்—எ-று.

(இ-ம்.) பாஞ்சபூத பௌதிக திருட்டி நீங்கியவிடத்து அவற்றின் வாசனைகள் சுத்தசங்கற்பாகாரமாகவும் பிரமசந்நிதானத்தி லதனம்சமான சித்துரூபமாகவுஞ் சஞ்சரிப்பதே சீவனுக்குச் சுத்த சொப்பனமெனக் கூறியதாம். (கக)

அ-ஈக:—சீவசுழுத்தியி னனுபவங்கூறல்.

கலி:—மரண மாகிய திசையிது வெனும்படி மனாதி
கரண மியாவையு மிறந்துள சுழுத்தியுங் கண்டேன்.

(இ-ள்.) மரணமாகிய திசையிது - மரணதிசையிது, எனும்படி - என்று யாவருஞ் சொல்லும்படி, மனாதி கரணமியாவையும் - மனமுதலிய வெக்கரணங்களும், இறந்து - நசித்து, உள - சத்தாமாத்திரமாயுள்ள, சுழுத்தியும் - வியட்டி சீவனுக்குச் சுத்தசுழுத்தியும், கண்டேன் - தரிசித்தேன்—எ-று.

'மரணமாகிய திசையிது வெனும்படி' என்பதற் குதாரணந் திருவள்ளுவர் "உறங்குவதுபோலுஞ் சாக்காடு" என்பதனு லறிக.

(இ-ம்.) சங்கற்ப ரகிதமான சூனியத்தைச் சத்தாகத்தரிசித்த தென்பதாம். (கஉ)

அ-ஈங:—சீவதுரியானுபவங் கூறல்.

கலி:—ஏஞ்ச லின்றியெக் கரணமு மிறந்திருண் டிருந்த
துஞ்ச லங்குணர் போதமாந் துரியமுங் கண்டேன்.

(இ-ள்) எஞ்சலின்றி-குறைவில்லாமல், எக்கரணமும்-எந்தக்கரணங்களும், இறந்திருண்டிருந்த - நசித்துச் சூனியமாக விருந்த, துஞ்சலங்குணர் - உறக்கமான வச்சூனியத்தை யறிந்த, போதமாம் - சுத்தசைதன்னியமான, துரியமுங்கண்டேன்-வியட்டி சீவனுக்குச்சுத்த துரியத்தையுந் தரிசித்தேன் — எ-று.

(இ-ம்.) சூனியத்தை யுணரும் போதத்தைக் கூடத்தஞாநத் தரிசித்ததென்பதாம். (௩௩)

அ-கை:—ஈசுர சாக்கிரானுபவங் கூறல்.

கவி:—துரிய மாகிய போதமோர் துளக்கமற் றனைத்தின்
கரிய தாயிருந் திடம்பர னனவெனக் கண்டேன்.

(இ-ள்.) துரியமாகிய - சீவதுரியமென்னுங் கூடத்தனாகிய, போதம் - ஞானமானது, ஓர் துளக்க மற்று - ஓரசைவின்றி, அனைத்தின் - விராட்டாதிய சகலத்திற்கும், கரிய தாய் - சாட்சியாக, இருந்திடம் - ஆனந்தானுபவமா யிருந்த விடம், பரனனவெனக் கண்டேன் - பரனது சுத்தசாக்கிரமெனத் தரிசித்தேன்—எ-று.

(இ-ம்.) கூடத்தனே விராட்டாயுஞ் சிருட்டியாதிய பஞ்சகிருத்தியத்திற்குச் சாட்சியாயும் நின் றறியு மிடமே யீசுர சாக்கிரமென்பதாம். (௩௪)

அ-கை:—பர சொப்பனானுபவங் கூறல்.

கவி:—புணர்ந்த விச்சகத் தொழித்துணர் போதமாந் தனையே
யுணர்ந்த மற்றது பரன்கன வெனும்படி யுணர்ந்தேன்.

(இ-ள்.) புணர்ந்த - பகிர்முகத்திற் பொருந்தின, இச்சகத்து - இப்பாஞ்சபூத பவுதிகத்தை, ஒழித்து-நீக்கி, உணர் - இவைகளைச் சித்தாக வறிகின்ற, போதமாந்தனை - ஞானத்தை, உணர்ந்த - சாட்சியாயறிந்த, மற்றது - அவ்விடமே, பரன்கனவெனும்படி - பரனுக்குச் சுத்த சொப்பனமென்பதாக, உணர்ந்தேன் - அறிந்தேன்—எ-று.

(இ-ம்.) சமட்டி யந்தரங்கத்தில் விவிதமாக விளங்கின விடமே பரசொப்பன மென்பதாம். (கடு)

அ-ஙக:—பரனுக்குச் சுழுத்தியனுபவங் கூறல்.

கவி:—சான்று சாக்கிய மிறந்திடத் தானிருந் தமையுந் தோன்று மிடம் பரன்சுழுத் தியதெனத் துணிந்தேன்.

(இ-ள்.) சான்று - இரண்ய கர்ப்பாவத்தையை யறிந்த சாட்சியும், சாக்கியம் - அஃதறியும் பொருளானபிரபஞ்சமும், இறந்திட - தனதுஸ்புரணமாக வடங்க, தானிருந்தமையும்- அவ்வவசரத்திற்றானிருந்தவகையும், தோன்றுமு-தோன்றுத, இடம் - சத்தாசாமானியமானவிடம், பரன் - பரனது, சுழுத்தியதெனத் துணிந்தேன் - சுத்த சுழுத்தியவத்தையாகத் தெளிந்தேன்—எ-று.

(இ-ம்.) பகிர்முகத்தி னுள்ள யாவுஞ் சத்தாமாத்திரமாகவிளங்குவது பரனுக்குச் சுத்தசுழுத்தி யென்பதாம். (கசு)

அ-கை:—பரனுக்குத் துரியானுபவங் கூறல்.

(கவி.) மரித்த தென்றுணர்ந் துரைத்தது
மரித்திடந் தனிலே
தெரித்த போதமே ததுபரன் றுரியமாய்த்
தெளிந்தேன்.

(இ-ள்.) மரித்ததென்று-யாவு நசித்ததென, உணர்ந்துரைத்ததும் - தெரிந்துசொன்னதும், மரித்திடந்தனிலே-நசித்த சூனியமான சத்தில், தெரிந்த போதம்-தெரிவித்த போதவடிவாய் நின்றதும், எது - எதுவோ, அது-அதுவே, பரன்றுரியமாய்த் தெளிந்தேன் - பரனுக்குச் சுத்ததுரியமாகத் தெரிந்தேன்—எ-று.

(இ-ம்.) சர்வசூனிய சாட்சியாக விளங்கும் பிரமமே பரதுரிய மென்பதாம். (கூஎ)

அ-கை:—சிவ சாக்கிரானுபவங் கூறல்

கவி.—இறையெ னும்பொருட் டுரியமே யென்னையாண்
டவனே
மறையி னந்தநற் பதபொரு ளனவென
மதித்தேன்.

(இ-ள்.) இறையெனும் பொருள்-ஈசுர சத்தார்த்தமான, துரியமே - பரதுரியமான வானந்தமே, என்னை யாண்டவனே - அடியேனைத் தடுத்தாண்ட வாசிரியரே, மறையினந்தம் - வேதமுடிவின்கணுள்ள, நற்பதப்பொருள்-நல்ல வசிபதார்த்தமான வஸ்து, நனவென மதித்தேன் - பிரமசாக்கிரமென வறிந்தேன்—எ-று,

(இ-ம்.) சர்வசூனிய தரிசனமாகிய பரதுரியமே பிரமத்திற்குச் சாக்கிரமென மத்தியகதத்திற் றரிசித்ததாம். (கூஅ)

அ-கை:—சிவ சொப்பனானுபவங் கூறல்.

கவி.—பண்டை விச்சுவ வாதனை பழுதுபோய் முழுதுங்
கண்ட கண்ணதே யாகிய கனவதுங் கண்டேன்.

(இ-ள்.) பண்டை - முன்னுள்ள, விச்சுவவாதனை-சகத்வாசனையாகிய, பழுதுபோய்-குற்றம் நீங்கி, முழுதுங் கண்ட-

யாவையுந் தானாகத்தரிசித்த, கண்ணதேயாகிய - சின்மாத்திரமாக விளங்கிய, கனவதுங்கண்டேன் - சிவசொப்பனத்தையுந் தரிசித்தேன்—எ-று.

(இ-ம்.) யாவுஞ் சின்மாத்திரமான லீலாவிபூதி யோடு விளங்குவதே பிரம சொப்பனமெனத் தரிசித்த தென்பதாம்.

அ-கை:—சிவசுழுத்தி யனுபவங் கூறல்.

கவி.—காட்சி யாவையுங் கண்ணதா வக்கண்ணுங் கரை
மாட்சி யாகிய வகோசர முறக்கமாய் மதித்தேன். [ந்த

(இ-ள்.)—காட்சியாவையும்-அறிபொருளனைத்தும், கண்ணதா - அறிவேவடிவாக விளங்க, அக்கண்ணும் - அவ்வறிவடிவும்; கரைந்த - தானாகக்கரைந்த, மாட்சியாகிய - மேலாகிய, அகோசரம் - சத்தாசாமானியமான வதீதமே, உறக்கமாய்மதித்தேன்-சிவத்திற்குச சுழுத்தியாக வறிந்தேன்—எ-று.

(இ-ம்.) போதாதீதமான சத்தாசாமானியமே பிரமத்திற்குச சுழுத்தியென்பதாம். (௧௦௦)

அ-கை:—சிவ துரியானுபவங் கூறல்.

கவி.—அருந்த வாமறை யந்தமா மகோசரந் தனினீ
யிருந்த வாறறி வித்தவா றெங்ஙன மிசைப்பேன்.

(இ-ள்.)அருந்தவா-அரிய தவத்தையுடைய வெனதாசிரியரே, மறையந்தமாம்-வேதமுடிவான, அகோசரந்தனில்-அவாங்மனோகோசரமாகிய வதீதத்தில், நீ-தேவரீர், இருந்தவாறு-அமைந்திருந்த வகையையும், அறிவித்தவாறு-தன்னைத்தானாகத்தெரிவித்த வகையையும், எங்ஙனமிசைப்பேன்—எவ்வண்ணஞ்சொல்லுவேன்—எ-று.

(இ-ம்.) அறிவிப்பதுமறிவதுந் தன்மயமாய்விளங்குந்தன்மையான மஹாமவுனமே சிவத்திற்குத் துரிய மென்பதாம்.

அ-கை —துரியாதீதபத மிதுவென நிரூபித்தல்.

கவி —எம்பிரானிடந் தொறுமிடந் தொறுமது வதுவா
தம்பிரானடஞ் செயும்வகை சாற்றுமா றறியேன். [ய்த

(இ-ள்) எம்பிரான்-எமதாசிரியரே, இடந்தொறு மிடந் தொறும்-எவ்வெவ்விடங்களி லெப்படியெப்படியோ, அதுவது வாய்-அவ்வவ்விடங்களி லப்படி யப்படியாக, தம்பிரான்-யாதொரு பிரமவஸ்துவானது, நடஞ்செயும் வகை - விளங்குந் தன்மையை, சாற்றுமா றறியேன் - உரைக்கும்வகை யுணர்ந் திலன்—எ-று.

(இ-ம்) துரியாதீதவஸ்து விதுவெனச் சொல்லாமற் சொ லலியதென்பதாம்

அ-கை —கைம்மா றிஃதென நிரூபித்தல்

கவி.—ஆவி யேயடி யேன்செய்கை மாறுனக் கென்
னெனில், பாவி யேனது தானுமுன் னுடையதாம்
பண்டே.

(இ-ள்.) ஆவியே-எனதுயிராகிய வாசிரியரே, அடியேன் செய்-அடிமை செயயவேண்டிய, கைமாறு-பதிலுபகாரம், உனக்கென்னெனில்-தேவரீருக்கென்னவென்றால், பாவியேன் - யாவுந்தானெனப் பாவிப்பதையும் விடுவேன், (அஃதேனென்றால்) பண்டே-முன்னமே, அதுதானும் - அப்பாவனையும், உன்னுடையதாம்-உமது சங்கற்பமா மாதலால்—எ-று.

‘பாவியேனது தானுமுன் னுடையதாம் பண்டே’ என்பதற்குப் பாவியேனாகிய நானென்பது முன்னமேயுனதுரிமையாயிற் றெனப் பொருள் கொள்ளினு மமையும்.

(இ-ம்.) சொரூப சங்கற்பஞ் சொரூபமாக விளங்குவதே கைம்மாறென்பதாம்.

ஆ-கை:—எனதுபணி நினதடியர்பாலென நிரூபித்தல்.

கவி:—ஆவல் செய்தென தாக்கையுள ளளவுநின் னடி
யா, ரேவல் செய்வதே யன்றிமற் றொன்றுநா
னறியேன்.

(இ-ள்) ஆவல்செயது - அன்புகொண்டு, எனதாக்கையுள்ளளவும்-எனது பிராரத்த தேகமுள்ள பரியந்தம், நின்னடியார் - தேவரீரடியாரேவிய, எவல் செய்வதே யன்றி - பணி செய்வதே யல்லாமல், மற்றொன்றும் - வேறொரு செய்கையுஞ்செய்ய, நானறியேன் - யான்றெரிகிலன்—எ-று.

(இ-ம்.) அடியர் பணியாவது விதேகபரியந்தந் தனது சங்கற்பத்தை யெல்லாந் தன்மயமாக்குஞ் செய்கை. இச்செய்கையேயன்றி வேறுகண்டில னென்பதாம். (௧௦௪)

அ-கை:—இவ்வாறுயுள்ள பிறவியையன்றி மாறான வெப்பதத்தையும் விரும்பேனெனல்.

கவி:—இறவி லெப்பத மும்பெறவேண்டிலேனென்றும்
பிறவி வேண்டுவ னின்றிருப் பணிசெயப்பெறினே.

(இ-ள்.) இறவில் - மரணதசையில், எப்பதமும்பெற - யாதொருபதத்தையுமடைய, வேண்டிலன்-விரும்புகில்லேன், என்றும் - எப்போதும், நின்றிருப்பணிசெய - தேவரீர் திருப்பணிகளைச் செய்ய, பெறின் - பெற்றால், பிறவிவேண்டுவன் - இவ்விதப் பிறப்பையே விரும்புவன்—எ-று.

எனவே, தனக்குத்தானேசெயயு மாசிரியர் பணியி னரு மையைக் குறிப்பித்ததென்க.

(இ-ம்.) தனது மயமாய் விளங்க வுதித்த விடத்தை நோகருஞ் சங்கற்பத்தைப் பெற விரும்பினதாம். (க0டு)

அ-கை:—இவனடைந்த வனுபவபேற்றி ஞரா மையை நூலாசிரியர் நிரூபித்தல்.

வேறு.

கவி:—என்றுபல கால்விழு மெழுந்தொழு
மழும்புரியு மென்னையினியா
னென்றுபல வாகவுரை செய்தவவ
னன்பினையெ னெஞ்சுருகியே.

(இ-ள்.) என்று - இப்படியென்று, பலகால்விழும் - பல தரம் நமஸ்கரிப்பன், எழும்-எழுந திருப்பன், தொழும்-கரதலாஞ்சலிசெய்வன், அழும் - அழாமலழுவன், புரியும் - துதிப் பன், என்னை - தேகந்தாஞகநின்ற வடியேனை, இனியானென்று - ஆநந்தமான பிரமசொரூபமென்று, பலவாக - சுருதி யுத்தி யனுபவந் தந்திரமென்னும் பலவேதுக்கள் காரணமாக, உரைசெய்த - அனுக்கிரகித்த, அவன்-அவ்வாசிரியரது, அன் பினை-கிருபையை (நோக்கி), என் - இஃதென்ன வதிசயமென்று, நெஞ்சுருகி - மனதுருகி—எ - று.

(இ-ம்.) இவையாவு மனுபூதி விலாசத்தி ஞனந்தானுப வப் பூரிப்பின் குறிப்பென்பதாம். (க0சு)

அ-கை:—சத்தியோமுத்த ஞனென்பதை நிரூ பித்தல்.

கவி:—எட்டிலறி வின்றியிறை தன்னிலறி
வின்றியிவ் வுடம்பினுடனே
வீட்டி லுறை வானையினி வீடுபெறு
மென்பது விளம்புகிலமே.

(இ-ள்.) எட்டிலறிவின்றி-சுருதியினாலறிந்த வபரஞான மாமில்லாமல், இறைதன்னி லறிவின்றி - அருளிறையி னநுக கிரகத்தினாலுண்டான பரஞானமு மில்லாமல், வீட்டில் - நிர ஞானமென்னுஞ் சுவானுபூதியாகிய முத்தியுலகில், இவ்வுடம் பினுடனே - இத்தேகத்தோடும், உறைவானை - சத்தியோ முத்தனாயடைந்த சசிவன்னனை, இனி - மேற்றேகாந்தத்தில், வீடுபெறுமென்பது-முத்தியையடைவா னென்பதை, விளம்பு கிலம - யாமுரைக்கிலம்—எ - று.

(இ-ம்.) சுருதி நிச்சயமு மாசிரிய ருபதேச நிச்சயமு மேகமெனக்கண் டனுபவித்த வக்கணமே முத்தியாதலி னிவ னுஞ் சத்தியோமுத்த னானென்பதாம். (கOஎ)

அ-ாக:—இவனடைந்த பதத்தின் லேசமான புண் ணியத்தின் மகிமையை நிரூபித்தல்.

கவி:—வஞ்சவலி யானரகின் வீழ்பிதிர
ரந்நரகு பாழ்படவிவன்
விஞ்சைவலி யாலடைய வேறினர்
சுராதிபர்கண் மேலுலகமே.

(இ-ள்.) இவன் - இச்சசிவன்னன், வஞ்சவலியால்-முன் வஞ்சகமாகச் செய்த பாவவலிமையினால், நரகின் - மாபூதிநர கத்தில், வீழ்பிதிரர் - வீழ்ந்த விவன் பிதிரர்கள், அந்நரகு

பாழ்பட - அந்த நரகம் பாழாகும்படி, விருசைவலியால்-இவனை டைந்த ஞானவலிமையிருல். சுராதிபர்கள - இந்திராதியாக ளது, மேலுலகம் - சுவர்க்கலோகத்தில், அடைய வேறினார் - நெருங்கே கூடி யேறினார்கள்—எ - று

(இ-ம்.) புண்ணிய பாவ நிருத்தியினபல னிப்பவதத்தி னுமே யனுபவிப்பனென்னனுரு சுருதிப்பிரமாணத்திற் கனுய வகைகாட்டியதாம. (கபஅ)

அ-ரை —இவனடைந்த ஞானத்தி னருமையை நிரு பித்தல.

க-வி:—தேவரு மனிததரு மிவன்றெழில்
வியந்துரை செயபடுவதோ
மூவருமவணங்கி முடி யாலவன
தேவல்செய முந்துறுவரே.

(இ-ள் ) தேவருமதேவர்களுர், மனித்தரும் - மானி டர்களுட, இவனெழில்-இஞ்ஞானியினது மகிமையை, விய ந்து - அதிசயித்து, உரைசெயப்படுவதோ - சொல்லத்தகக தோ, மூவரும் - மும்மூர்த்திகளும், முடியால்-சிரசினுல், வண ங்கி - நமஸகரித்து, அவனது - அந்த ஞானியினது, ஏவல் செய - சங்கற்பித்த பணியைச செயய, முந்துறுவர் - நானு னென முநதுவாாகள்—எ - று.

(இ-ம் ) யாவும் ஞானநோக்கின்படி நடக்குமென்பதாம்.

அ-ரை:—ஞானவான் மகான்மிய நிரூபித்தல்.

கவி.— ஞானியை நரனசுர னெனுதொழிக
ஞாலமுய நாதனருளா

மேனியது கொண்டுதனை நல்கவரு
மென்றறையும் வேதமுடிவே.

(இ-ன்) ஞானியை - ஞானவானை, நான்சுரனென்றது- நரனென்றுந் தேவனென்றுஞ் சொல்லாமல், ஒழிக - விடுக, ஞாலமுய - உலகத்தா ருய்யும்பொருட்டு, நாதன்-பரமசிவம். அருளாம் - தனதருளாகிய, மேனியதுகொண்டு - மானிடசட்டை சாற்றி, தனை - தற்சொரூபத்தை, நல்கவருமென்று- அனுக்கிரகிக்க வெழுந்தருளுமென, அறையும் வேதமுடிவு - வேதாந்தம் டறையறையுமாதலின்—எ - று.

(இ-ப்.) ஞானியைப் பூசிக்குந் தகைமை தேவர்களுக்கும் நரர்களுக்கு மின்றென்பதாம். (கக0)

**கவி:**—மூல மான மறைபபடி மூலமே
கோல மான பரிசுகள கூறுவாம்.

சசிவன்னபோதம் முற்றிற்று.

மகாமகோபாத்யாய, டாக்டர்
உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம்
அடையாறு, செ